18th ஸ்ரீ ... College
53520

சர்வம்விஷ்ணுமயம்ஜகத்.

நம்மாழ்வார்துணை.

அழகியமணவாளதாசரென்கிற

திவ்வியகவி.

பிள்ளைப்பெருமாளையங்காரவர்க

ளருளிச்செய்த

திருவேங்கடமாலை

இதற்கு T. 12695

ஸ்ரீஹரிபராங்குசவிலாச திவ்விய சபையாரவர்கள்

அநுமதியின்படிக்காரியஸ்தராகிய

கோ-அரங்கசாமிபிள்ளை

யவர்கள்

நூதனமாகவுரையியற்றித்தருகவெனக்

கேட்டுக்கொண்டமையால்

சென்னைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவராகிய

புதுவை-நயநப்பமுதலியாரவர்கள்-குமாரரும்

சென்னபுரி

இந்துவித்தியாதானச்சங்கத்துத்தலைவருமாகிய

இராஜகோபாலமுதலியாரவர்களா

லியற்றப்பட்டு.

புரசபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது குமாரர்

இராகவப்பிள்ளை அவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1896.

ஸ்ரீ

ராமஜெயம்.

அஷ்டாவதானி

பெருங்கருணை

முத்தழகையங்காரவர்களாற்செய்த

உரைப்பாயிரம்.

மலையினின்றிழிந்தொரீஇ வல்குநீர்ப்பொன்னி
அலைதரக்குளிர்ந்த வந்தரீபத்துப்
புறங்களிற்சிறந்த புண்ணியாளஞ்சேர்
அரங்கமாநகரெனு மரண்மிகுகோயிலுள்
ஆயிரம்பணப்பை யனந்தப்பேழையிற்
பாயொளிபரப்பு பச்சைமாமணிற்
றிருத்தகவிளக்குஞ் சிந்தாமணியை
அருத்தமுங்கிளையுமற் றனைத்துமாக்கொளீஇ
அப்பெரும்பொருட்கே யணிகலனுமென
ஒப்பருஞ்சொல்லணி யுயர்பொருளணியொடு
கலம்பகமுதலிய கவிதரமாலை
நலம்பெறவியற்றிய நாவினன்மிக்கோன்
எழுதாமறைகளு மிசைத்தமிழ்மறைகளும்
பழுதாகாதுதன் பாலால்விளக்கினோன்
மாதவன்பத்தியோர் வடிவுகொண்டதென
ஓதுதற்குரிய வுத்தமகாந்திரன்
மன்னுசீரழகிய மணவாளதாசர்
என்னும்விப்பிரவா னியற்றியதான
வேங்கடமாலையாம் வெள்ளைநூற்றினுக்கும்
ஈங்குநல்லுரையொன் றெளிதரவிரித்தனன்
திதிநிறைபுதுவைப் பதியினின்வாழும்
நதிகுலத்தரசெனும் நயநப்பவள்ளல்
செய்தவப்பயனே சேயெனவுதித்தாங்
கெய்தியபெரும்புக ழியற்றமிழ்நாவலன்
தராதலமெச்சுந் தகைசால்
இராஜகோபால னெனும்பெயரினனே.

பாயிரம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

அழகியமணவாளதாசர்

என்கிற திவ்வியகவி

பிள்ளைப்பெருமாளையங்கார்

சரித்திரம்.

கருவிலே திருவுடையராய்த் தேறுநான்மறை வேதியர் குலத்திலே அவதரித்துப் பிள்ளைப்பெருமாளென்னுந் திருநாமங்கொண்டு வேதவேதாந்தங்களில் நிபுணரானதன்றிப் பகவத்ஸ்வரூப ரூபகுண விபூதிகளிலாழ்வாரக ளருளிச்செயல்களும் நாதயாமுந யதிவராதிகளாகிற ஆசாரியர்களருளினரஹஸ்யார்த்தங்களும வல்லராய்ப்போருகிறஇவர், "வாழ்விப்பா னெண்ணமோ வலவினையி னெனமென்னை, யாழ்விப்பா னெண்ணமோ வஃதறியேன்—தாழ்விலாப், பாடலழகார் புதுவைப் பட்டபிரான் கொண்டாடுங், கூடலழகாநின் குறிப்பு,, என்று அத்தியவசித்துத் திருமலைநாயகர் மதுரையி லரசாட்சிசெய்கிற காலத்தில் அவரது ராஜாங்க சேவைகளில் ஒரு ராயசமென்னும் உத்தியோகம பெற்றுத் தமக்குசிதமான வருணாசிரம தருமங்களில் வழுவாது காலக்ஷேபராய்க் "குழலிசையளிமேவு கூரம்வந்தருள் குருபரனிருபா போதனைநத,, திடச்சித்தராகையாலே "வானிட்டகீர்த்தி வளர்கூரத்தாழ்வான் மகிழவநத, தேனிட்டதார்நம் பெருமாள்குமாரர் சிவனையயன், முனிட்டசாபந் துடைத்தாளரங்கா சங்காழிபுயம, நானிட்டனென்றருள் பட்டர்பொற்றாட்கதி நந்தமக்கே, பெருமபேறென் றாசாரியருசி கனக்கவுடையராய் வருகிறநாளில் ஒருநாள் ராஜசபையி லுத்தியோக நடத்துகிறவர்கள் நடுவே தாமுங்கூடவிருந்து காரியஞ்செய்து வருகிறபோது, தமது உத்தரீயத்தை இரண்டு கையிலுங்கொண்டு கிருஷ்ண கிருஷ்ணவென்று தேய்த்தனர்.

அதுகண்ட சிலர் 'ஐயங்காரே நீர் நிரந்தரம் பகவத்குணானுபவசீலரேசரி, ஆனாலும உமது உத்தரீயத்தை இங்ஙனேன் செய்தீரென்று வினவ, அதற்கு நேர்விடை ஆம் அருகுபந்தத்தின் சுவாலை தாவியெறிந்த திருத்திரை அவிந்து நம்பெருமாளும் திருத்தேரிலெழுந்தருளுகிறாரென்றார். அங்ஙன் கேட்டவர்கள், திருவரங்கம் பெரியகோயில் திருவீதியில் நமபெருமாள் திருத்தேர் உற்சவங்கண்டருளுகிற துமக்கெங்ஙனே தெரியலாயிற்றென்று நகைத்து, ஏதோ உமக்கிங்ஙனே ஒரு பிரமமுண்டாயிருக்கிறதானால் ராஜசேவைக்கு முழுதும் விரோதமாகாதே என்றும் ஐயங்கார்விஷயத்தில் இரக்கமுள்ளவாகளாயொழிய இங்கே திருத்தேரிலே திருத்திரையிலே பந்தத்தின் சுவாலை தாவி எரியச்செய்தே தேரின்மேலே பெருமாளைச்சேவித்துநின்ற ஐயங்கார்கண்டு திரையைப்பற்றி உதறிக்கீழேதேய்ந்து அவித்தருளின

தாக அர்ச்சகர்முதலான முதலிகள் தெரிந்து உடனே தோஷபரிகார
ஞ்செய்து திருத்தேர் நடத்தியருளினார்கள்.

பின்பு நாயகர் ஞானபக்தியுள்ளவராகையாலே அவருக்கு இங்கு
த்தைவிசேஷம் தலத்தாராலே தெரிந்து ஆனந்தபரவசராய் ஐயங்கா
ரைநோக்கி திருத்தேருச்சவத்துக் கெங்ஙனே போயினீரென்ன, அத
ற்கு ஐயங்கார் எனக்கு மானஸாநுபவமேயல்லது கோவிலுக்குப்போ
னதிலலயென்ன, நாயகர் அதிக்ஷேபித்து நீர் உற்சவத்தினன்று அங்கி
ருந்ததாகச்சொல்வது பொய்யோவென்ன, அப்போது இவர் உத்தரீய
த்தைக் கிருஷ்ண கிருஷ்ணவென்று தேய்த்ததுகண்டசிலர், இங்ஙனே
யென்றுண்மைகூற, நன்று நன்றென அதிசயித்து அன்றிரவு நித்திரை
ப்போதில, தாம நம்பெருமாள் சந்நிதிக்குப்போனதாகவும் தென்றிரு
க்காவேரியில் ஐயங்கார் தோதவத்தில் தாமறையோராய்நிற்கக்கண்டு
அவருடனே சந்நிதிக்குப்போய் பெரிய பெருமாளைச் சேவித்து மீளும
போது ஐயங்காரைக்காணமல் மயங்கிக் கண்விழித்து வெடிந்த பின்பு
ஐயங்காரை வரவழைத்து, நீரோமஹாநுபாவராயிருக்கிறீர இனி என்
சேவைக்குத்தக்கரல்லீர் உமக்கென்னவேண்டுமென்ன, பெரிய கோயி
லில் தளிகைப்பிரசாதமும் அங்குத்தைவாசமும் வேண்டுமென்ன,
அன்றுதொடங்கிச் சலவைக்கல மண்டபப்பிரகாரத்தில வடமேற்கு
மூலையில் ஒரு அறையும் தளிகைப்பிரசாதமும் கிடைக்கும்படிசெய்து
ஐயங்காரை அனுப்பிவிட, ஐயங்காரும் அங்ஙனே யெழுநதருளியிரு
ந்து பெரிய கோயிலுக்குக் கலம்பகம்-அந்தாதி-மாலை-ஊசல், அழகா
திருமலைக்கு-அந்தாதி, திருவேங்கடத்துக்கு-மாலை-அந்தாதி, நூற்றெ
ட்டுத்திருப்பதிக்கும் ஒரந்தாதிமுதலியபிரபந்தங்களருளிச்செய்து "பா
சமாமடியர்பா" லென்கிறபடியே அநவரதாநுபவராய் வருகிறவர் ஒரு
நாள், தமது திருவடிகளில் சம்பந்தரானவர்களுக்கு நமக்கு அந்திமத
சை பசுமாட்டினாலே முடிவாம் என்று தெரியச்சொல்லி, அப்படியே
சக்கிரவர்த்தி திருமகள் சேவையாய், ஸ்ரீவைகுண்டநாதர் சந்நிதியில்
சேவித்துக்கிடக்கச்செய்தே, ஒரு நொண்டிப்பசு வந்து தவறி அவர்
மேல்விழ, அது விழுந்ததனாலாகிய துன்பத்துடனே "துலைவு துளவவெ
னச்சொலலுஞ்சொற்போச்சே, அளவினொடு மூச்சுமாச்சே—முள
ரிக், கரங்கால் குளிர்நதததே கண்ணும் பஞ்சாச்சே, இரங்கா யரங்கா
வினி" என்று திருநாட்டுக்கெழுந்தருளினரென்பது பிரசித்தம். இன்னு
மிவரது வைபவங்களெல்லாந தெரிநதோராலே கேட்டுணர்க.

இது - திரிசிரபுரம்

வித்வான் - கோவிந்தபிள்ளையவர்களால்

எழுதப்பட்டது.

[illegible]

ஸ்ரீ

ராமஜெயம்.

நம்மாழ்வார் துணை.

திருவேங்கடமாலை

மூலமும் உரையும்.

—()—

நான்முகம்-வெண்பா.

தெய்வவணக்கம்.

திண்பார் புகழுந் திருவேங்கட மாலை
வெண்பாவா னூறும் விளம்புதற்குக்—கண்பாராய்
நாராயணா வடியே னாடுந் தமிழ்வேத
பாராயணா சடகோபா.

இதன்பதப்பொருள்.

நாராயணா-ஸ்ரீமந்நாராயணா, அடியேன்-தாசனாகியநான், நாடும்-தியானம்பண்ணுகின்ற, தமிழ்வேதம்-தமிழ்வேதமாகிய பிரபந்தங்களாலே, பாராயணா-பாராயணம்பண்ணப்பட்டவனே, சடகோபா-சடகோபனென்னுந் திருநாமத்தையுடையவனே, திண்-பலம்பொருந்திய, பார்-பூமியிலுள்ளவர்கள், புகழும்-புகழாநின்ற, திருவேங்கடம்-திருவேங்கடத்திற்கு, மாலை-மாலையாக, வெண்பாவால்-வெண்பாவினால், நூறும்-நூறுகவிதையும், விளம்புதற்கு-சொல்லுதற்கு, கண்பாராய்-கிருபைசெய்வாயாக வென்றவாறு. (க)

மூலமே யென்றகரி முன்வந் திடர்தொலைத்து
நீலமேகம்போல நின்றானைப்—பாலாய
வேலைநடுவிற் றுயிலும் வித்தகனை வேங்கடத்து
மாலையன்றிப் பாடாதென் வாய்.

இதன்பதப்பொருள்.

மூலமே-ஆதிமூலமே, என்ற-என்றுமுறையிட்ட, கரிமுன்-யானைமுன், வந்து-தோன்றி, இடர்-அதனதுதுன்பத்தை, தொலைத்து-நீக்கி, நீலம்-நீலநிறமான, மேகம்போல-மேகத்தைப்போல, நின்றானை-நின்ற சுவாமியை, பாலாய-பாலாகிய, வேலை-கடலின், நடுவில்-மத்தியில், துயிலும்-திருக்கண்வளரும், வித்தகனை-சருவக்ஞனை, என்வாய்-என்வாயானது, வேங்கடத்துமாலை-திருவேங்கடத்தினின்ற திருக்கோலமா யெழுந்தருளியிருக்கின்ற திருமாலை, அன்றி-அல்லாமல், பாடாது-வேறொரு வஸ்த்தியதேவரைப் பாடாது—எ-று. (உ)

அவையடக்கம்.

ஆழ்வார்கள்செந்தமிழை யாதரித்தவேங்கடமென்
றாழ்வானபுன்சொல்லுந் தாங்குமா—லேழ்பாரும்
வெல்லுங்கதிர்மணியும் வெம்பரலுஞ்செஞ்சாந்தும்
புல்லும்பொறுத்தமையே போல.

இதன்பதப்பொருள்.

ஏழ்பாரும்-ஏழுலகமும், வெல்லும்-விலைமதிக்கும், கதிர்-பிரகாசிக்காநின்ற, மணியும்-நவரத்தினங்களையும், வெம்பரலும்-வெவ்வியபருக்கைக்கல்லையும், செஞ்சாந்தும்-செவ்வியசந்தனமரங்களையும், புல்லும்-புற்களையும், பொறுத்தமையேபோல் -பொறுக்குந்தன்மையேபோல, ஆழ்வார்கள்-ஆழ்வார்களியற்றிய, செந்தமிழை-செவ்வியதமிழை, ஆதரித்த-அங்கீகரித்த, வேங்கடம்-திருவேங்கடமானது, என்-என்னுடைய, தாழ்வான-இழிவான, புன்-புல்லிய, சொல்லும்-சொற்களையும், தாங்கும்-அங்கீகரிக்கும்—என்றவாறு. ஆல்-அசைநிலை. (ங)

நான்முகமுற்றிற்று.

—

நூல்.

பொன்னுமணியும் பொலிந்தோங்கிப்பார்மகட்கு
மின்னுமணிமுடியாம் வேங்கடமே—மன்னும்
பரமபதநாட்டினன் பையரவின்சூட்டிற்
சிரமபதநாட்டினன் சேர்வு.

இதன்பதப்பொருள்.

பொன்னும்-செம்பொன்னும், மணியும்-நவமணியும், பொலிந்து-விளங்கி, ஓங்கி-உயர்ந்து, பார்மகட்கு-பூமிப்பிராட்டியாருக்கு, மின்னும்-பிரகாசிக்காநின்ற, மணிமுடியாம்-இரத்தினகிரீடம்போலாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, மன்னும்-நித்தியமான, பரமபதநாட்டினன்-பரமபதமென்னுந் திருநாட்டையுடையவன், பை-படத்தையுடைய, அரவின்-காளிங்கனென்னும் பாம்பின், சூட்டில்-முடியில், சிரபதம்-மேலானதிருவடியை, நாட்டினன்-நிறுத்தி நடனஞ்செய்த பெருமான், சேர்வு-சேருமிடம்—எ-று. சேர்வு வேங்கடமெனமுடிக்க இம்முடிபு இனிவரும்பாட்டிற்கெல்லா மொக்கும். (க)

சோதிமதிவந்துதவழ் சோலைமலையோடிரண்டாய்
மேதினியாள்கொங்கைநிகர் வேங்கடமே—போதி
லிருப்பாற்கடலா னிபமூர்ந்தார்க்கெட்டாத்
திருப்பாற்கடலான் சிலம்பு.

இதன்பதப்பொருள்.

சோதி - பிரகாசம்பொருந்திய, மதி - சந்திரன், வந்து - சேர்ந்து, தவழ் - ஊராநின்ற, சோலைமலையோடு-சோலைமலையுடனே, இ

ண்டாய்-இரண்டாகி, மேதினியாள்-பூமிதேவியினுடைய, கொங்கைநி கர்-தனங்கள்போலும், வேங்கடமே - திருவேங்கடமலையே, போதில்-தாமரைப்பூவில, இருப்பாற்கு-இருப்பவனாகியபிரமதேவற்கும், அடல்-பலம்பொருந்திய, ஆன்-இடபவாகனத்தையும், இபம்-வெள்ளையானையையும், ஊர்ந்தார்க்கு-ஊர்ந்தவர்களாகிய சிவனுக்குந் தேவேந்திரனுக்கும், எட்டா-எட்டாத, திருப்பாற்கடலான்-திருப்பாற்கடலை யுடையவனது, சிலம்பு-மலை—எ-று. (உ)

மாலைக்கோலித்திரியும், வையகத்தோர்தம்பிறவி
வேலைக்கோர்வங்கமாம், வேங்கடமே—சோலைத்
தருமாதரைநட்டான், றண்முல்லையாயர்
தருமாதரைநட்டான், சார்பு.

இதன் பதப்பொருள்.

மாலை-மயக்கத்தை, கோலி-பற்றி, திரியும்-சஞ்சரிக்கும், வையகத்தோர்-பூமியிலுள்ளோர், தம்-தமது, பிறவி-பிறப்பாகிய, வேலைக்கு-சமுத்திரத்துக்கு, ஓர்வங்கமாம் - ஓர்மரக்கலம்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, சோலைத்தரு - சோலையாகிய கற்பகத்தருவை, மா-பெரிய, தரை-பூமியினிடத்தில, நட்டான்-நிறுத்தினவன், தண்-குளிர்ந்த, முல்லையாயர்-முல்லைநிலத்திடையர், தரும்-பெற்ற, மாதரை-பெண்களை, நட்டான்-சினேகித்தவன், சார்பு-சாருமிடம்—எ-று. (ங)

நாலுதிசைமுகமு, நண்ணுதலாலொண்கமல
மேலுறலால்வேதாவாம், வேங்கமே—சாலுறையு
மண்மயக்கந்தேற்றுவித்தான், மாற்றுதல்போலாரியனு
லுண்மயக்கந்தேற்றுவித்தா, னூர.

இதன் பதப்பொருள்.

நாலுதிசைமுகமும்-நாலுதிக்கிலுள்ளாரும், நண்ணுதலால் - வந்து சேவித்தலாலும், ஒண்-அழகிய, கமலமேலுறலால்-நீரைமேலே கொள்ளுதலாலும், வேதாவாம-பிரம்மாவைப்போன்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, சாலுறையும்-சாலின்கணுறையும், மண்மயக்கம்-மண்ணொடுகலந்தநீரை, தேற்றுவித்தால்-தேற்றாங்கொட்டையால், மாற்றுதலபோல்-நீக்குதல்போல், ஆரியனால் - ஆசாரியனால், உள் - மனதின், மயக்கம்-கலக்கத்தை, தேற்றுவித்தான்-தேறப்பண்ணினவனது, ஊர்-ஊர்—எ-று. நாலுதிசைமுகமும் - நான்குதிக்குமுகமாக, நண்ணுதலால்-பொருந்தலாலும், ஒண்கமலமேலுறலால் - அழகிய தாமரைப்பூவின்மே லிருத்தலானிம் வேதாவென[illegible]மொழிச்சிலேடைவகையாயிற்று—எ-று. (ச)

பாணிபிறைகொன்றை, பணிசூடிமானேந்தி
வேணியரனைப்பொருவும், வேங்கடமே—யாணிநிறப்
பீதாம்பரனூர், பிரமர்வாழண்டங்கண்
பீதாம்பரனை விரும்பு.

இதன்பதப்பொருள்.

பாணி-கங்கையும், பிறை-மூன்றாம்பிறையும், கொன்றை - கொன்றையும், பணி-பாம்பையும், சூடி-தரித்து, மான்-மானையும், ஏந்தி-தாங்கி, வேணி-சடையையுடைய, அரனை-சிவனை, பொருவும்-ஒப்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஆணிநிறம்-ஆணிநிறமான, பீதாம்பரனார்-பொன்னாடையையுடையவர், பிரமர்-பிரமதேவர், வாழ்-வாழ்கின்ற, அண்டங்கள்-அண்டங்களுக்கு, மீதாம்-மேலாகிய, பரனார்-பரதத்துவமானவர், விருப்பு-விரும்புமிடம்—எ-று. அரனெனச் செம்மொழிச் சிலேடைவகையாயிற்று. (௫)

மாலாய்ச்சசிதழுவி வச்சிரமேந்திப்புகர்மா
மேலாய்ப்புரந்தரனும் வேங்கடமே—நாலாய்க்
கிளர்வாருமந்தரத்தான் கேட்டமரர் வேட்டுத்
தளர்வாருமந்தரத்தான் சார்பு.

இதன்பதப்பொருள்.

மாலாய்-மேகங்கள்பொருந்தி, சசி-சந்திரனை, தழுவி-கூடி, வச்சிரம்-வச்சிரக்கல்லும், ஏந்தி-தாங்கி, புகர்-பொன்நிறத்தையுடைய, மா-யானையை, மேலாய்-மேற்கொண்டு, புரந்தரனும்-தேவேந்திரனையொப்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நாலாய் - நான்கென்னுந்தொகையாய், கிளர்-உயர்ந்த, வாரு-புயமாய், மந்தரத்தான்-மந்தரமலையையுடையவன், அமரர்-தேவர்கள், கேட்டு-கேள்விப்பட்டு, வேட்டு-விரும்பி, தளர்வாரும்-கிட்டாமற்றளர்ச்சியடைவதற்கேதுவான, அந்தரத்தான்-பரமகாயத்தையுடையவன், சார்பு-சாருமிடம்—எ-று. மாலாய்-ஆசையாய், சசி-இந்திராணியை, தழுவி-மேவி, வச்சிரமேந்தி-வச்சிராயுதத்தைத்தரித்து, புகர்-புள்ளிகளையுடைய, மா - ஐராவதமென்னும் வெள்ளையானையை, மேலாய்-மேற்கொள்ளும்புரந்தரனெனச்செம்மொழிச் சிலேடைவகையாயிற்று. (௬)

வள்ளிபுணர்ந்தாறுமுக மன்னிமயின் மேற்கொளலால்
வெள்ளிலைவேல்வேள்போலும் வேங்கடமே—யுள்ளினைத்
தங்கமலப்பார்வையான் றன்னடியார்மேல்வைக்குஞ்
செங்கமலப்பார்வையான் சேர்வு.

இதன்பதப்பொருள்.

வள்ளி-வள்ளிக்கொடிகள், புணர்ந்து-பொருந்தி, ஆறுமுகமும்-ஆற்றினிடம், மன்னி-தன்னிடத்துநிலைபெற்று, மயில்-மயிலை, மேற்கொளலால்-மேற்கொண்டிருத்தலால், வெள்-வெளுப்பாகிய, இலை-அச்சுவடிவான, வேல்-வேலாயுதத்தையுடைய, வேள்போலும் - சுப்பிரமணியனைப்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, உள்ளினை - தன்னைநினைத்தவனை, தங்க-இருக்க, மலம்-அழுக்கையுடைய, பார்-பூமியின்கண், வையான்-இருத்தாதவன், தன்-தனது, அடியார்மேல்-தாசர்களினிடத்து, வைக்கும்-அன்புவைக்கின்ற, செங்கமலப் பார்வையா

ன்-செந்தாமரைப்பூப்போலுந் திருக்கண்களையுடையவன், சேர்வு-சேருமிடம்—எ-று. வள்ளி-வள்ளியாகியபெண்ணை, புணர்ந்து-கூடி, ஆறுமுகம்-ஆறுதொகையான முகத்தோடே, மன்னி - பொருந்தி, மயின்மேற்கொளலால் - மயிலின்மேலிருத்தலால், வேள்போலுமெனப் பிரிமொழிச்சிலேடைவகையாயிற்று. (எ)

புள்ளரவநீரரவம்போர்மாவரவமறா
வெள்ளரவவெற்பாகும்வேங்கடமே—யொள்ளரியாய்
மாகனகம்பத்தினார், வாய்கண்கையுந்திபதங்
கோகனகம்பத்தினார் குன்று.

இதன்பதப்பொருள்.

புள்-பறவைகளின், அரவம்-ஒலியும், நீர்-ஆற்றினீரினது, அரவம்-சத்தமும். போர்-யுத்தஞ்செய்யாநின்ற, மா-யானைகளினது, அரவம்-ஓசையும், அறா-நீங்காத, வெள்-வெள்ளிய, அரவவெற்பாகும்-சேடவெற்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒள்-அழகிய, அரியாய்-சிங்கமாய், மா-பெரிய, கனம்-பெருத்த, கம்பத்தினார்-ஸ்தம்பத்தினுள்ளேநின்றுந்தோன்றினவர், வாய்-வாயொன்றும, கண-கண்களிரண்டும, கை-கரங்களுன்கும், உந்தி-கொப்பூழொன்றும, பதம் - பாதமிரண்டுமாகிய, கோகனகம்-தாமரைப்பூ, பத்தினார் - பத்துண்டானவருடைய, குன்று-மலை—எ-று. (அ)

துய்யசெம்பொற்கோயிற்சுடரெறிப்பக்கண்முகிழ்த்து
வெய்யவன்றேர்மாவிடறும்வேங்கடமே—யையிருநூ
றானமுகப்பாம்பணையாரானிரப்பின்னூதிவரும
கானமுகப்பாம்பணையார் காப்பு,

இதன்பதப்பொருள்.

துய்ய-பரிசுத்தமான, செம்பொன் - செவ்வியபொன்னினாற்செய்த, கோயில்-திருக்கோயிலினுடைய, சுடர் - காந்தி, எறிப்ப - பிரகாசிக்க, கண்-கண்கள், முகிழ்ந்து-மூடி, வெய்யவன-சூரியனுடைய, தேர்-தேரிற்கட்டும், மா-குதிரைகள், இடறும் - காலிடறப்பட்ட, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஐயிருநூறான-ஆயிரமான, முகம் - முகத்தையுடைய, பாம்பு-பாம்பாகிய ஆதிசேடனை, அணையார - மெத்தையாகவுடையார், ஆனிரப்பின்-பசுக்கூட்டத்தின்பின்னே, ஊதிவரும் - ஊதிக்கொண்டுவரும், கானம்-இராகத்தை, உகப்பாம்-விருப்பமாகவுடைய, பணையார்-பிள்ளாங்குழலையுடையவா, காப்பு-காக்குமிடம்—எ-று. ()

மாண்டுபிறக்குந்துயர்போய்வைகுந்தம்புக்கவரு
மீண்டுதொழக்காதலிக்கும்வேங்கடமே—பாண்டுமக
னேறிரதப்பாகனுரோத்துமடியார்நாவி
லூறிரதப்பாகனூர்.

இதன்பதப்பொருள்.

மாண்டு-இறந்து, பிறக்கும்-துயர், துன்பம்-போய்நீங்கி, வைகுந்தம-பரமபதத்தில், புக்கவரும்-புகுந்தவரும், மீண்டு-திரும்பிவந்து, தொழ-வணங்க, காதலிக்கும்-ஆசைப்படும், வேங்கடமே-திருவேங்கடமலையே,

பாண்டுமகன்-அருச்சுனன், ஏறு-ஏறுகின்ற, இரதப்பாகனூர்-இரதத்திற்குச்சாரதியானவர், ஏத்தும்-துதிசெய்யும், அடியார்-தாசர்களினது, நாவில-நாவினிடத்தில், ஊறு-ஊறுகின்ற, இரதம் சுவையான-பாகனூரசருக்கரைப்பாகுபோன்றவருடைய, ஊர்-ஊர்—எ-று. (௰)

கோலியொருநான்கு குலமறையுநாற்றிசையும்
வேலியெனநின்றேத்தும்,வேங்கடமே—வாலிதனை
நண்பாவையாதரித்தான்,ஞானமுதலாழ்வார்கள்
வெண்பாவையாதரித்தான், வெற்பு.

இதன்பதப்பொருள்.

கோலி-கட்டான, ஒருநான்குகுலமறையும்-சிரேட்டமாகிய நான்கு கூட்டமானவேதமும், நாற்றிசையும் - நாலுதிக்கிலுள்ளாரும, வேலியென-வேலிபோல, நின்றேத்தும்-நின்றுதோத்திரம்பண்ணும், வேங்கடமே-திருவேங்கடமலையே, வாலிதனை-வாலியை, நண்பா - நட்பாக, வையாது வைக்காது அறித்தான்-சங்கரித்தவன், ஞானமுதலாழ்வார்கள்-அறிவையுடையமுதலாழ்வார்கண்மூன்றுபேருஞ்சொன்ன, வெண்பா-வெண்பாவை, ஆதரித்தான்-அங்கீகரித்தவனுடைய, வெற்பு-மலை—எ-று. (௰௧)

தெள்ளியதோர்வீடருளுஞ்,சீர்கேட்டுப்பொன்மலையும
வெள்ளிமலையும்பணியும,வேங்கடமே—புள்ளின்
கொடிவாகனத்தான், குளிர்ந்திருண்டகாரின்
வடிவாகனத்தான், வரை.

இதன்பதப்பொருள்.

தெள்ளியது-ஆராயப்பட்ட, ஓர்-ஒப்பில்லாத, வீடருளும்-மோட்சத்தைக்கொடுக்கும், சீர-கீர்த்தியை, கேட்டு-கேள்விப்பட்டு, பொன்மலையும-மகமேருவும், வெள்ளிமலையும்-கயிலங்கிரியும், பணியும் - வணங்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, புள்ளின்-பறவையாகிய, கொடி-கொடியையும், வாகனத்தான்-வாகனத்தையுமுடையவன், குளிர்ந்து-குளிர்ச்சிபொருந்திய, இருண்ட-கறுத்தகாரின்மேகம்போல,வடிவு-நிறத்தையும், ஆகன்-திருமேனியையுமுடையவன், நத்தான்-சங்கையுடையவனது, வரை-மலை—எ-று. பறவையாவது-கருடன், சங்கமாவது-பாஞ்சசன்னியம். (௰௨)

எப்பூதலமு,மிறைஞ்சித்திசைநோக்கி
மெய்ப்பூசனைபுரியும்,வேங்கடமே—கொப்பூ
ழிலகுமுண்டகந்தரத்தா,னின்றளிக்குமீரே
ழுலகுமுண்டகந்தரத்தானூர்.

இதன்பதப்பொருள்.

எப்பூதலமும்-எந்நிலத்துள்ளாரும், திசைநோக்கி-திக்குநோக்கி, இறைஞ்சி-வணங்கி, மெய்-உண்மையாக, பூசனைபுரியும்-பூசிக்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, கொப்பூழ் - உந்தியினிடத்தில், இலகும்-பிரகாசிக்கின்ற. முண்டகம்-தாமரைப்பட. [illegible]

தான்பெற்று, அளிக்கும்-காக்கப்பட்ட, ஈரேழுலகும் - பதினாலுலோகத்தையும், உண்ட - புசித்த, கந்தரத்தான் - மிடற்றையுடையவனது, ஊர்-ஊர்—எ-று. (௰௩)

நோவினையுநோயினையு நோய்செய்வினையினையும
வீவினையுந்தீர்த்தருளும்,வேங்கடமே—மூவினைசெய்
மூவடிவாய்ப்பச்சென்றான், முன்னாளகலிகைக்குச்
சேவடிவாய்ப்பச்சென்றான், சேர்வு.

இதன்பதப்பொருள்.

நோவினையும்-பிறவிநோவாகியவருத்தத்தையும், நோயினையும்-வியாதியையும், நோய்செய்வினையும் - வியாதிக்கேதுவாகிய பூர்வகர்மத்தையும், வீவினையும்-மரணத்தையும்-தீர்த்தருளும்-நீக்கிக்கிருபைசெய்யும், வேங்கடமே-திருவேங்கடமலையே, மூவினைசெய் - மூன்றுதொழிலையுஞ்செய்யும், மூவடிவாய்-மூன்றுசொரூபமாய், பச்சென்றான் - பச்சைநிறத்தையுடையவன், முன்னாள் - முற்காலத்தில், அகலிகைக்கு - கௌதமருடைய தேவியான அகலிகையென்னும் பெண்ணுக்கு, சேவடி-சிவந்ததிருவடி,வாய்ப்ப-கிடைக்க,சென்றான்-சென்றவனது, சேர்வு-சேருமிடம்—எ-று. (௰௪)

பித்துமலடூமைமுடம் பேய்குருடுகூன்செவிடு
மெய்த்துயர்நோய்தீர்த்தருளும்,வேங்கடமே—பத்தருக்கு
வந்ததுக்கங்காப்பான், மலருந்தியினுலகந்
தந்ததுக்கங்காப்பான், தலம்.

இதன்பதப்பொருள்.

பித்து-பயித்தியமும், மலடு-பிள்ளைப்பேறின்மையும், ஊமை-வாய்பேசாமையும், முடம்-நடவாமையும், பேய்-பிசாசும், குருடு-கண்தெரியாமையும், கூன்-உடல்வளைவும், செவிடு-காதுகேளாமையும், மெய்த்துயர்நோய்-உடம்புத்துக்கவியாதியுமாகிய இவையெல்லாம், தீர்த்தருளும்-நீக்கிக்கிருபைசெய்யும், வேங்கடமே-திருவேங்கடமலையே, பத்தருக்கு-தாசருக்கு, வந்ததுக்கம்-வந்ததுன்பத்தை, காப்பான்-நீக்குவான், மலர்-தாமரைப்பூவையுடைய, உந்தியின்-கொப்பூழிலே, உலகம்-உலகத்தை, தந்து-பெற்று, அதுக்கு-அதற்கு, அங்காப்பான்-வாய்திறப்பவனுடைய, தலம்-இடம்—எ-று. (௰௫)

வாடப்பசித்த,வரிப்புழுவைவாலாட்டி
மேடத்தைப்பார்த்துறுக்கும்,வேங்கடமே—கூடத்து
கம்பவளமாவென்றான்,காசினிக்கும்வெண்ணெய்க்குஞ்
செம்பவளமாவென்றான்,சேர்வு.

இதன்பதப்பொருள்.

வாட-சரீரம்வாட, பசித்த-பசித்த, வரி-வரிகளையுடைய, உழுவை-புலியானது, வாலாட்டி-வாலையாட்டி,மேடத்தை-மேடவிராசியை, பார்த்து-நோக்கி,உறுக்கும்-கோபிக்கும்,வேங்கடமே-திருவேங்கடமலையே, கூடத்து-கூடத்தின,கம்பத்து-ஸ்தம்பத்திற்கட்டும்,வளம்-வளமபொருந்திய, மா-யானையை, வென்றான்-வென்றவன், காசினிக்கும் - பூமிக்கு

ம், வெண்ணெய்க்கும்-அளைக்கும் செம்பவளம்போலுந்திருவாயை, ஆ வென்றான்-ஆவென்றுதிறந்தவன், சேர்வு-சேருமிடம்—எ-று. வாடிப் பசித்தவென்பதூஉம் பார்த்திருக்குமென்பதூஉம்பாடம் யானையாவது குவலயாபீடம். (௰௬)

காவிவரும்வானரங்கடண்குவட்டிற்கற்கடக
மேவிவரக்கண்டோடும்வேங்கடமே—காவிரிசூழ்
பொற்றிருவரங்கத்தான்போதன்சிவனென்னு
மற்றிருவரங்கத்தான்வாழ்வு.

இதன்பதப்பொருள்.

தாவி-தாவிக்கொண்டு, வரும்-வருகின்ற, வானரங்கள்-குரங்குகள், தண்-குளிர்ச்சிபொருந்திய, குவட்டில்-சிகரத்தில், கற்கடகம்-கற்கட கவிராசி, மேவிவர-பொருந்திவர, கண்டு-பார்த்து, ஓடும்-பயந்தோடும், வேங்கடமே-திருவேங்கடமலையே-காவிரிசூழ்,காவிரியாறுசூழ்ந்தபொ ற்றிருவரங்கத்தான்பொன்மயமானதிருவரங்கமென்னுந் திருப்பதியையு டையவன்போதன்-பிரமனும், சிவன்-ஈசனும், என்னும்-என்றுசொல் லும், இருவர்-இருவரையும்-அங்கத்தான், சரீரத்திலுடையவன்-வாழ் வு, வாழுமிடம்—எ-று. மற்று-அசைநிலை. (௰௭)

ஒண்சிந்துரத்தைவெறுத் தூடும்பிடிவேழம்
விண்சிங்கங்கண்டணைக்கும் வேங்கடமே—யெண்சிந்தைக்
கோராவிருந்தா னொருநாள்விதுரனுக்கு
வாராவிருந்தான் வரை.

இதன்பதப்பொருள்.

ஒண்-அழகிய, சிந்துரத்தை-யானையை, வெறுத்து-கோபித்து, ஊடு ம்பிணங்காநின்ற-பிடிவேழம், பெண்யானையானது - விண், ஆகாயத்தி லிராநின்ற-சிங்கம், சிங்கவிராசியை-கண்டு, பார்த்து-அணைக்கும், சே ருமபடியான-வேங்கடமே, திருவேங்கடமலையே-எண்எண்ணப்பட்ட, சிந்தைக்கு-மனதுக்கு, ஓராவிருந்தான்-எட்டாமலிருந்தவன்,ஒருநாள்- ஒருதினம், விதுரனுக்கு-விதுரனென்பவனுக்கு, வாராவிருந்தான்-வரு தற்கரிய விருந்தானவனுடையவரைமலை—எ-று. (௰௮)

மாதுமடக்கன்னிகழை வந்தனுகிக்கம்பத்தின்
மீதுநடிப்பாளொக்கும் வேங்கடமே—யூதுகுழற்
பாலன்பாலாக்குவித்தான் பஞ்சவர்க்கா நூற்றுவரைக்
காலன்பாலாக்குவித்தான் காப்பு.

இதன்பதப்பொருள்.

மாது-பெண்ணாகிய, மடம்-மடமைத்தன்மைபொருந்திய, கன்னி-க ன்னி, கன்னிராசியானது-கழை, மூங்கிலில்-வந்தணுக, வந்துபொருந் தகம்பத்தின்மீது-ஸ்தம்பத்தினமேல்,நடிப்பாளொக்கும்-நடிக்கின்றஆரி யப்பெண்ணையொக்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஊது-ஊ தாநின்ற, குழற்பால்-வேய்ங்குழலினிடத்தில், அன்பால்-அன்பினால், ஆ-பசுக்களைக்,குவித்தான்-கூட்டினவன், பஞ்சவர்க்காக-பாண்டவரு க்காக, நூற்றுவரை-துரியோதனாதிகளை, காலன்பால்-இயமனிடத்தில், ஆக்குவித்தான்-போகப்பண்ணினவன், காப்பு-காக்குமிடம்—எ-று. ()

ர

மன்னுகுடிக்குறவர் வானூர்துலாத்திடையே
மின்னுமணிநிறுக்கும் வேங்கடமே—யென்னு
ளரவிந்தப்போதகத்தா னன்பாலழைத்த
கரவிந்தப்போதகத்தான் காப்பு.

இதன்பதப்பொருள்.

மன்னு-நிலையான, குடி-குடிகளையுடைய, குறவர்-குறவர்கள்,வான்-ஆகாயத்திலே.ஊர்-தவழ்கின்ற,துலாத்திடையே-துலாராசியினிடத்து மின்னும்-பிரகாசிக்கா நின்ற, மணி-இரத்தினங்களை, நிற்கும்-நிறுக்கும்படியான, வேங்கடமே-திருவேங்கடமலையே, என்-தாசனுகியவென்னுடைய, உள்-இருதயமாகிய, அரவிந்தப்போது-தாமரைப்பூவை, அகத்தான்-வீடாகவுடையவன், அன்பால்-அன்பினுலே, அழைத்த-ஆதிமூலமேயென்றுமுறையிட்ட, கரம்-கையையுடைய, விந்தம்-விந்தபர்வதத்தையொத்த, போதகத்தான்-யானையை யுடையவன், காப்பு-காக்குமிடம்—எ-று. (உஎ)

கொல்லைக்குறவர் குளிர்மதியானைக்ககன
வில்லைக்குனித்தெய்யும் வேங்கடமே—கல்லை
யரிவைவடிவாக்கினு னன்னமாய்வேத
விரிவைவடிவாக்கினுன் வெற்பு.

இதன்பதப்பொருள்.

கொல்லை-தினைக்கொல்லையுடைய, குறவர்-குறவர்கள், குளிர்-குளிர்ந்த, மதி-சந்திரனிடத்துள்ள, மானை - களங்கமாகியமானை, ககனவில்லை-இந்திரதனுவை, குனித்து - வளைத்து, எய்யும் - அம்பெய்யப்படும், வேங்கடமே-திருவேங்கடமலையே, கல்லை-கல்லுருவத்தை, அரிவைவடிவாக்கினுன்-பெண்ணுருவமாக்கினவன், அன்னமாய் - அம்ஸவடிவாய், வேதம்-வேதத்தின், விரிவை-வித்தாரத்தை, வடி-தெளியப்பண்ணின, வாக்கினுன்-திருவாக்கையுடையவன், வெற்பு - மலை—எ-று. கல்லானவள்-அகலிகை, அன்னமாவது - பிரமனுக்கு, வேதோபதேசம்பண்ணினகதை. (உக)

தேனேறித்தேன்வைக்குந் திண்கழைமேல்விண்மகர
மீனேறிவேள்கொடியாம் வேங்கடமே—வானேறித்
தீமுகனுகத்திருப்பார் சேவடிக்காளானவர்க்
காமுகனுகத்திருப்பார் காப்பு.

இதன்பதப்பொருள்.

தேன்வண்டுகள், ஏறி-ஏறுதலைச்செய்து, தேன்வைக்கும்-தேன்கூடுவைக்கும், திண்-வலிய, கழைமேல்-மூங்கிலின்மேல், விண்-ஆகாயத்திலிருக்கிற, மகரமீனேறி-மகரராசியானதேறி, வேள்-மன்மதனுடைய, கொடியாம்-கொடியையொப்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, வான்-பரமாகாயமாகிய பரமபதத்தில், ஏறி - ஆரோகணித்து, தீ-விஷச்சுவாலாக்கினியையுடைய, முகன்-முகமுள்ள, நாகத்து-பாம்பின்மீது, இருப்பார்-இருப்பவர், சேவடிக்கு-திருவடிக்கு, ஆளானவ

னே-அடிமையானவென்னே, காமுகனுக-காமத்தைவிரும்பினவனுக, திருப்பார்-மாற்றுதவர், காப்பு-காக்குமிடம்—எ-று. நாகமாவது-இருவனந்தாழ்வான், முகம்-முகமெனப்பொலியாயிற்று. (௨௨)

ஒண்கொம்பிற்றேனிறு லூர்பிறைக்கோட்டாலுடைந்து
விண்கும்பவாய்நிறைக்கும் வேங்கடமே—வண்கும்பக்
கம்பத்தானைக்கடுத்தார் காரரக்கர்போர்மாளக்
கப்பத்தானைக்கடுத்தார் காப்பு.

இதன்பதப்பொருள்.

ஒண் - அழகிய, கொம்பில்-கொம்பினிடத்திருக்கின்ற, தேனிறால்-தேன்கூடு, ஊர்-தவழ்கின்ற, பிறைக்கோட்டால்-பிறையாகியகொம்பினுலே, உடைந்து-உடைபட்டு, விண்-ஆகாயத்திலிராகின்ற, கும்பம்-கும்பவிராசியினுடைய, வாய்நிறைக்கும்-வாய்மட்டுந் தேனைநிறைக்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, வண்கும்பம்-வளப்பம்பொருந்தியமத்தகத்தையுடைய, கம்பத்து - தூணிற்கட்டுதற்குரிய, ஆனைக்கு-யானைக்கு, அடுத்தார்-சமீபித்தவர், கார்-கரிநிறத்தைப்பொருந்திய, அரக்கர்-இராக்கதர்கள், போர்-யுத்தத்தில், மாள-மடிதற்கு, கம்-சிரசு, பத்தானை-பத்தென்னுந்தொகையுடையவனை இராவணனை, கடுத்தார்-கோபித்தவர், காப்பு-காக்குமிடம்—எ-று. யானையாவது - கசேந்திராழ்வான். (௨௩)

கூனவிளவெண்குருகு கோனேரியில் விசும்பூர்
மீனநிழலைக்கொத்தும் வேங்கடமே—கானகத்துப்
பொன்னுருமையெய்தார் பூங்கழலேதஞ்சமென
வுன்னுருமையெய்தா ரூர்.

இதன்பதப்பொருள்.

கூன்-வளைந்தகழுத்தையும், இளம்-இளமையும், வெண்-வெண்ணிறத்தையுமுடைய, குருகு-கொக்குப்பட்சியானது, கோனேரியில்-கோனேரிதீர்த்தத்திலே, விசும்பு-ஆகாயத்தில்,ஊர்-சஞ்சரிக்கின்ற,மீனம்-மீனவிராசியினது, நிழலை-சாயலை, கொத்தும்-கொத்தானின்ற,வேங்கடமே-திருவேங்கடமலையே, கானகத்து-காட்டினிடத்தி-பொன்-பொன்னிறத்தை, ஆர்-பொருந்திய, உழை-மானே, எய்தார்-எய்தவர்,பூங்கழலே-தாமரையாகிய திருவடிகளே, தஞ்சமென-பற்றுக்கோடென, உன்னுருமை-நினையாதவரிடத்திலே, எய்தார்-செல்லாதவருடைய,ஊர் ஊர்—எ-று. பொன்மானனவன் மாரீசன். (௨௪)

மணமூலந்தாவென்று மந்திகடுவற்குறைப்ப
விண்மூலங்கேட்டுஞ்சும் வேங்கடமே—யொண்மூல
வேதத்திருக்குழையார் வெய்யோனிரண்டனைய
சீதத்திருக்குழையார் சேர்வு.

இதன்பதப்பொருள்.

மண-மண்ணிலிருக்கிற, மூலம்-கிழங்காகியமூலத்தை, தாவென்று-கொடுவென்று, மந்தி-பெண்குரங்கு, கடுவற்கு - ஆண்குரங்குக்கு, உ

னைப்ப-சொல்ல, விண்-ஆகாயத்திலிருக்கின்ற, மூலம்-மூலநட்சத்திரம், கேட்டு-கேட்டு, அஞ்சும்-பயப்படும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒண்-அழகிய, மூலம்-காரணமான, வேதத்து-வேதங்களில்,இருக்குழையார்-இருக்கும்வேதத்தினிடத்தையுடையவர், வெய்யோனிரண்டனைய-இரண்டுசூரியனுக்குச்சமானமான, சீதம் - குளிர்ந்த, திருக்குழையார் - சிறப்புப்பொருந்திய குண்டலங்களையுடையவர், சேர்வு-சேர்வுமிடம்—எ-று. வன்மூலமென்பதூஉம்-எங்குமென்பதூஉம்பாடம், கிழங்குதாவென்பதற்கு மூலந்தாவென்பதனு லதைக்கேட்டுமூலநட்சத்திரமான பெண்தன்னை ஆண்குரங்குபிடித்துப் பெண்குரங்கு கையிலே கொடுக்கப்போகிறதென்று பயப்படும் திருவேங்கடமலையென்பது குறிப்பு. (உ௫)

நாலவிட்டப்பொன்னூச னன்னுதலாருந்துதோறு
மேலவிட்டந்தொட்டிழியும் வேங்கடமே—யாலமிட்ட
பொற்புக்களங்கறுத்தார் போர்சரியவாணன்றோள்
வெற்புக்களங்கறுத்தார் வீடு.

இதன்பதப்பொருள்.

நாலவிட்ட-தூங்கவிட்ட, பொன்-பொன்னாற்செய்த, ஊசல்-ஊஞ்சலை, நன்னுதலார்-நல்லநுதலினையுடையபெண்கள், உந்துதோறும்-தள்ளுந்தோறும், மேல்-ஆகாயத்திலிருக்கின்ற, அவிட்டம் - அவிட்டநாளாகியபெண்ணை, தொட்டு-தீண்டி, இழியும்-இறங்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஆலமிட்ட-விடத்தைவைத்த, பொற்பு-பொலிவையுடைய, களம்-மிடறு, கறுத்தார் - கறுத்தவரானசிவன், போர்-போரிலே, சரிய-பின்னிட, வாணன் - வாணாசூரனையுடைய, தோள்-தோள்களாகிய,வெற்புக்கள்-மலைகளை, அங்கு- அவ்விடத்து,அறுத்தார்-அறுத்தவருடைய, வீடு-கிரகம்—எ-று. அவ்விடமாவது-யுத்தகளம். ()

பானிறங்கோடெங்கினிளம் பாளைவிரியச்சுனையின்
மீனினங்கொக்கென்றொளிக்கும் வேங்கடமே—வானிமிர்ந்த
வெள்ளத்துக்கப்பாலான் மெய்ப்பரமயோகியர்க
ளுள்ளத்துக்கப்பாலானூர்.

இதன்பதப்பொருள்.

பால்நிறம்-வெண்மைநிறத்தை, கொள்-கொண்ட, தெங்கின்-தென்னமரத்தினது, இளம்பாளை-சிறுபாளை, விரிய-முகிழ்விரிய, சுனையின்-சுனையிலிருக்கிற, மீனினம்-மீன்கூட்டங்கள், கொக்கென்று-கொக்கென்றுகருதி, ஒளிக்கும்-பயந்துமறையும், வேங்கடமே - திருவேங்கடமலையே, வான்-ஆகாயபரியந்தம், நிமிர்ந்த-எழுந்த, வெள்ளத்து-வெள்ளத்திலே, கப்பு-கிளைகளையுடைய, ஆலான்-ஆலிலைமேற்பள்ளிகொண்டவன், மெய்-உண்மையான, பரமயோகியர்கள்-மோட்சத்தைவிரும்பும்யோகியர்களுடைய, உள்ளத்துக்கு-இருதயத்துக்கு, அப்பாலான்-எட்டாதவனுடைய, ஊர்-ஊர்—எ-று. உள்ளத்துக்கப்பாலானென்பது-அகங்காரங்கடந்தசித்தத்திலே நிற்கப்பட்டவனென்றறிக. (உ௭)

கொம்பணியுந்தேமாங் குயில்கருடன்போற்கூவ
வெம்பணிகள்புற்றடையும் வேங்கடமே—வம்பணியும்
விண்ணினைந்துகாப்பார் மிசைவைத்தார்பத்தரைத்தம்
முள்ளினைந்துகாப்பா ருவப்பு

இதன்பதப்பொருள்.

கொம்பு-கொம்பிலே, அணியும்-அழகுபெற்ற, தேம்-இனிமைபொருந்திய, மாங்குயில்-மாமரத்திலிருக்கின்றகுயிலானது, கருடனைப்போல்-கருடப்பக்ஷியைப்போல், கூவ-சப்திக்க, வெம்பணிகள்-வெய்யபாம்புகள், புற்று-புற்றுகளை, அடையும்-நுழையும், வேங்கடமே - திருவேங்கடமலையே, வம்பு-மணத்தினாலே, அணியும்-அழகுபெற்ற, விண்ணின்-தேவலோகத்திலுள்ள, ஐந்துகா - ஐந்துவகையான தருக்களை, பார்மிசை-பூமியினிடத்து, வைத்தார்-வைத்தவர், பத்தரை-அடியார்களை, தம-தம்முடைய, உள்-திருவுளத்தில், நினைந்து-கருதி, காப்பார்-காக்கப்பட்டவர், உவப்பு-விரும்புமிடம்—எ-று. குயில் கருடன்போல் கூவுமெனப்பாடங் கூறுவாருமுளர் ஒருபறவைபோலக் கூப்பிடுமென்பது நியாயமாகாது கருடனைப்போலக்கூவுதல் பலபடச்சொல்லிவித்தாற் கிளி-குயில் பூவை பயிற்றின வாசகஞ்சொல்லுமென்பது நியாயம் கருடன்போலக்கூப்பிடுதலும் பயிற்றுவித்த லாகாதோவெனின் பயிற்றுவிக்கிறவனுக்கு வாராதபாஷைக்குரல் குயிலுக்கெங்கேபயிற்றுவிப்பாமென்னமறுக்க, ஐந்துவகைத்தருவாவன அரிச்சந்தனம்-தேவதாரம்-மந்தாரம்-பாரிசாதம்-கற்பகம்-இவற்றுளொன்றாகிய பாரிசாதவிருட்சத்தைச் சத்தியபாமைக்காகக் கொண்டுவந்து பூமியினிடத்து வைத்தவர். (௨௮)

தெங்கிளநீர்வீழச் சிதறுமணிகைக்கரிகள்
வெங்கனலென்றஞ்சிப்போம் வேங்கடமே—பைங்கழையின்
மாண்டாரைப் பண்டழைத்தார் மாமறையோன்பாற்றோன்றி
மாண்டாரைப் பண்டழைத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

தெங்கு-தென்னமரத்தின், இளநீர்-இளநீர்கள், வீழ-விழ, சிதறும்-சிதறுகின்ற, மணியை-மணிகளை, கரிகள்-யானைகள், வெங்கனலென்று-வெவ்விய அக்கினியென்று, அஞ்சிப்போம்-பயந்தோடும், வேங்கடமே-திருவேங்கடமலையே, பைங்கழையின் - பசியமூங்கிலின், மாண்-அழகையுடைய, தாரை-குழலினிடத்தில், பண்-ஏழிசை, தழைத்தார்-தழைக்கவூதினவர், மாமறையோன்பால்-பெருமைபொருந்தியபிராமணனிடத்தில், தோன்றி-பிறந்து, மாண்டாரை - இறந்தவரை, பண்டு - பழமையிலே, அழைத்தார்-அழைத்தவர், வாழ்வு - வாழுமிடம்—எ-று. மறையோனாவான் சாந்திபனாகிய உபாத்தியாயர் இவருடைய பிள்ளைகளாயிறந்தவரைக் குருதஞ்சணையாக இயமலோகத்திலேபோய்மீட்டுக்கொண்டுவந்த கதை பாகவதம் ஏழிசையாவன தாரம்-துத்தம்-கைக்கிளை-விளரி-இளி-குரல்-உழை-யென்பனவாம (௨௯)

அங்கயலினமேக மதிரம்பெருமாரதள்
வெங்கயமென்றங்காக்கும் வேங்கடமே—பங்கயத்தோ
டம்புவனங்கடந்தா ரம்புயத்துமங்கையொடு
வெம்புவனங்கடந்தார் வெற்பு.

இதன்பதப்பொருள்.

அங்கு-அவ்விடத்து, அம்பலின-பக்கத்தின, மேகம்-மேகங்கள். அதிர-ஆரவாரிக்க, பெருமாதங்கள்-பெரியமலைப்பாம்பு, வெங்கயமென்று-வெவ்வியயானையென்று நினைத்து, அங்காக்கும்-வாய்திறக்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, பங்கயத்தோடு-பிரமதேவனோடுகூட, அம்-அழகிய, புவனங்கள்-உலகங்களை, கடந்தார்-கடந்தவர், அம்புயத்து-தாமரையினிடத்திலிருக்கின்ற, மங்கையோடு-பொருந்திய ஸ்ரீதேவியாருடனே, வெம்பு-சுடுகின்ற வனம்-காட்டை, [illegible] கடந்தார்-கடந்தவருடைய, வெற்பு-மலை—என்று. அவ்விடமாவது மலைப்பக்கமென்றறிக. ( )

திங்களிறுமாந்துவைத்தியமாக்கவளமென்று
வெங்களிறுகைநீட்டும் வேங்கடமே—பொங்கமர்
வாய்த்தவ [illegible] செய்தபிழை
பார்த்தவமபுரியார் பற்று.

இதன்பதப்பொருள்.

திங்கள்-சந்திரன். இறுமாந்து-இறுமாப்படைந்து. [illegible] வதனை, இட-[illegible], [illegible] வெங்களிறு-வெவ்வியயானை. கை-கையை, நீட்டும்-நீட்டும், வேங்கடமே-திருவேங்கடமலையே, பொருந்து-மிகுந்த, அமர்-போரிலே, [illegible] [illegible] [illegible] உடையவர், [illegible]-[illegible]. செய்த-இயற்றிய, பிழை-குற்றத்தை, பார்த்து-கண்டும், அவமபுரியார்-அவர்களுக்குத் துன்பஞ்செய்யாதவர், பற்று-பற்றிடம்—என்று. அதனையெனவும் அவாயவென [illegible] [illegible] [illegible], [illegible] விக்கப்பட்டது (௩௧)

அம்புலியினைவாழ்பானதிருங்குரற்பகுவாய
வெம்புலியைக்கண்டேங்கும் வேங்கடமே—நம்புமெனை
வீங்கூத்தைக்கண்டிருப்பார் விண்ணோர்நராம்பிறந்து
சாங்கூத்தைக்கண்டிருப்பார்சார்பு

இதன்பதப்பொருள்.

அம்புலியினை-சந்திரனிடத்திலே, வாழ்பான-வாழ்கின்றமான. அதிரும்-ஆரவாரிக்கும், குரல-குரலையும், பகுவாய்-பிளந்தவாயையுமுடைய, வெம்புலியை-வெவ்வியபுலியை, கண்டு-பார்த்து, எங்கும்-பயப்படும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நம்புமெனை-நம்புகின்றவெனை, வீங்கு-மிகுந்த, ஊத்தைக்கண்-அழுக்கான சரீரத்தினிடத்திலே, இருப்பார்-இருப்பவர், விண்ணோர்-தேவர்களும், நரர்-மனிதர்களும், பிறந்து-உற்பவித்து-சாங்கூத்தை-இறக்கப்பட்ட நாடகத்தை, கண்டு-பார்த்துக்கொண்டு, இருப்பார்-இருக்கப்பட்டவர், சார்பு-சார்பிடம்—என்று (௩௨)

கண்ணால்வெடித்தகழைமுத்தங்கார்துளைத்து
விண்ணாலிபோடுதிரும்வேங்கடமே—யெண்ணார்
கலங்கவருமஞ்சனையார் கான்முளையையூர்ந்தார்,
சலங்கவரு மஞ்சனையார்சார்பு. ௫௩

இதன்பதப்பொருள்.

கண்ணால்-கணுவினாலே, வெடித்த-வெடிக்கப்பட்ட, கழைமுத்தம் மூங்கிலின்முத்துகள், கார்-மேகத்தை, துளைத்து-துளைசெய்து, விண்-ஆகாயத்து, ஆலிபோடு-ஆலங்கட்டியுடனே, உதிரும்-சிதறும், வேங்கடமே-திருவேங்கடமலையே, எண்ணார்-சத்துருக்கள், கலங்க-பயப்பட வரும், வருகின்ற-அஞ்சனையார், அஞ்சனாதேவியாருடைய - கான்முளையை, பிள்ளையாகிய-அநுமானை, ஊர்ந்தார்-ஊரப்பட்டவர், சலம்-கடனீரை, கவரும்-பருகும், மஞ்சு-மேகத்துக்கு, அனையார்-ஒப்பானவர், சார்பு-சாருமிடம்—எ-று. (௫௩)

செல்லுக்குமேற்செல்லுந் திண்ணியவேய்வாசவனார்
வில்லுக்குவாளியாம் வேங்கடமே—யெல்லுக்கு
ளந்தகாரம்படைத்தா ராரழல்வாயம்பினால்
வெந்தகாரம்படைத்தார்வெற்பு.

இதன்பதப்பொருள்.

செல்லுக்கு-மேகத்துக்கு, மேற்செல்லும்-மேலாகவளரும், திண்ணிய-பலமுள்ள, வேய்-மூங்கிலானது, வாசவனார்-தேவேந்திரனுடைய, வில்லுக்கு-தனுவுக்கு, வாளியாம்-அம்புபோலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, எல்லுக்குள்-பகற்காலத்துக்குள்ளே, அந்தகாரம்-இருட்டை, படைத்தார்-உண்டாக்கினவர், ஆர்-ஆரிய, அழல் - அக்கினி, வாய்-வாய்ந்த, அம்பினால்-அஸ்திரத்தினாலே, வெந்த-சுடப்பட்ட, கார்-கறுத்த, அம்பு-கடலை, அடைத்தார்-அடைத்தவருடைய,வெற்பு-மலை—எ-று. பகலிருட்டையுண்டாக்கினது சயந்திரனைக்கொல்லுவதற்காகவென்றறிக. (௫௪)

பொன்கமழுங்கற்பகத்தின் பூங்காவணத்துக்கு
மென்கமுகங்காலாகும் வேங்கடமே—நன்கமரு
மூரத்திகிரியார் ரூதுந்திகிரியார்
வீரத்திகிரியார்வெற்பு.

இதன்பதப்பொருள்.

பொன்-அழகுபெற்று, கமழும்-பரிமளிக்கா நின்ற, கற்பகத்தின்-கற்பகத்தருக்களினாலே, பூங்காவணத்துக்கு - பொலிவுபெற்ற பந்தர்க்கு, மென்கமுகம்-மெல்லியகமுகம்மரமானது, காலாகும் - கால்போலதாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நன்கமரும் - நன்றாகவிருக்கும், ஊரத்திகிரியார்-அத்திகிரியென்னுந் திருப்பதியுடையவர், ஊதும்-ஊதுகின்ற, திகிரியார்-வேய்ங்குழலையுடையவர், வீரம்-வீரம்பொருந்திய, திகிரியார்-சக்கரத்தையுடையவர், வெற்பு-மலை—எ-று. (௫௫)

நண்ணிலைக்கண்ணுற்றுநிற்றலைதொடுத்ததேனிறால்
விண்ணிலைக்கண்ணாடியாம்வேங்கடமே—புண்ணிலைக்கு

சோதிவணங்கரியார் தூயசனகாதியரு
மோதிவணங்கரியா ரூர்.

இதன்பதப்பொருள்.

தண்-குளிர்ந்த, நிலை-நிலைமையுடைய, கண்-கணுக்கள்பொருந்திய, மூங்கிற்றலை-மூங்கிலினுச்சியிலே, தொடுத்த - அடுக்கின, தேனிறால்-தேன்கூடானது, விண்-தேவருக்கு, நிலைக்கண்ணாடியாம் - நிலைக்கண்ணாடிபோலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, உள்-இருதயத்தில், நிலைக்கும்-நிலைபெற்றிருக்கும், சோதி-பிரகாசம்பொருந்திய, வணம்-நிறம், கரியார்-கருமையானவர், தூய-பரிசுத்தமான, சனகாதியரும்-சனகர்முதலானவரும், ஓதி-வாழ்த்தி, வணங்க-தொழுதற்கு, அரியார்-எளிதாகாதவருடைய, ஊர்-ஊர்—எ-று. சனகாதியர்முன் என்பதா லும்பாடம் விண்ணினுள்ளாரை விண்ணென்றதாகுமெயர். (௧௬)

தண்கமுகின்பாளை தடங்கதிரின்செல்வனுக்கு
வெண்கவரிபோலசையும் வேங்கடமே—யொண்கடல்சூழ்
வண்டுவரைநாட்டினான் மத்தாகவாரிதியுட்
பண்டுவரைநாட்டினான் பற்று.

இதன்பதப்பொருள்.

தண்-குளிர்ந்த, கமுகின் - கமுகம்பாளையானது, தடம் - பெருமை பொருந்திய, கதிரின்-கிரணங்களையுடைய, செல்வனுக்கு-சூரியனுக்கு, வெண்கவரிபோல்-வெண்சாமரைபோல், அசையும் - அசைப்பட்ட, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒண்-ஒள்ளிய, கடல்சூழ்-கடல்சூழ்ந்த, வண்-வளப்பம்பொருந்திய, துவரைநாட்டினான் - துவாரகையென்னுந் திருப்பதியையுடையவன், வாரிதியுள்-கடலிலே, மத்தாக-மத்தாக, பண்டு - முற்காலத்திலே, வரை-மலையை, நாட்டினான்-நிறுத்தினவன், பற்று-பற்றுமிடம்—எ-று. மலையாவது மந்தரகிரி. (௧௭)

அங்கதிருங்கான்யாற் றடர்திவலையானனைந்து
வெங்கதிருந்தண்கதிரும் வேங்கடமே—செங்கதிர்வேற்
சேந்தனத்தமைந்தான் திருத்தாதைவிற்கிளையாள்
பூந்தனத்தமைந்தான் பொருப்பு.

இதன்பதப்பொருள்.

அங்கு-அவ்விடத்து, அதிரும்-ஆரவாரிக்கும், கான்யாறு-கானியாற்றில், அடர்-நெருங்கிய, திவலையால்-துளியினாலே, நனைந்து-தோயப்பட்டு, வெம்-வெப்பம்பொருந்திய, கதிரும்-சூரியனும், தண்-குளிர்ந்த, கதிரம்-சந்திரனும், வேங்கடமே-திருவேங்கடமலையே, செங்கதிர்-செவ்வியகிரணங்களையுடைய, வேல்-வேலாயுதத்தைத்தரித்த, சேந்தன்-சுப்பிரமணியனுக்கும், அத்தமைந்தான்-ஐந்துகைகளையுடைய விநாயகனுக்கும், திருத்தாதை - திருத்தாதையாகிய சிவனுடைய, விற்கிளையாள்-வில்லுக்குப்பின்னே பிறந்தவளான சீதாதேவியாருடைய, பூந்தனத்து-பூம் அழகியதனத்தினிடத்து, அமைந்தான் - பொருந்தினவனுடைய, பொருப்பு-மலை—எ-று. அங்கு நனைந்த அவ்விடம் விற்கிளையாளென்பதை விற்கிளையாளென்றாக்கி வில்லுக்குத் தோற்றுப்போகாதவளொன்றும் பூந்தனத்தமைந்தானென்பதற்குப் பெரியபிராட்டியார் த

னத்திலே அமைந்தானென்றுமாம், இன்னும் விற்கிளையானென்பதை வில்லையுடைய கூட்டமாகிய சனகர்கூட்டத்திலே பிறந்தவளெனினுமாம். (௩௮)

சேணுலவுதிங்களெனுஞ் சித்தசவெள்வெண்குடைக்கு
வேணுவொருகாம்பாகும் வேங்கடமே—கோணுமனத்
தென்னையாளாகத்தா னின்னருள்செய்தான்கமல
மின்னையாளாகத்தான் வெற்பு.

இதன்பதப்பொருள்.

சேண்-ஆகாயத்தில், உலவு-சஞ்சரிக்கப்பட்ட, திங்களெனும்-சந்திரனாகிய, சித்தசவெள் - சித்தசனாகிய மன்மதனுடைய, வெண்குடைக்கு-வெள்ளைக்குடைக்கு, வேணு-மூங்கில், ஒருகாம்பாகும் - ஒருகாம்பு போலிருக்கும், வேங்கடமே - திருவேங்கடமலையே, கோணும் - செவ்வைப்படாத, மனத்து- மனத்தையுடைய, என்னை-என்னை, ஆளாகத்தான்-அடிமையாகத்தான், இன்-இனிய, அருள்செய்தான் - கிருபைபண்ணினவன், கமலம்-தாமரையிலிருக்கிற, மின்னை-மின்போலும் பெரியபிராட்டியாரை, ஆள்-அங்கீகரிக்க, ஆகத்தான்-மார்பையுடையவனது, வெற்பு-மலை—எ-று. என்பதை நீயெனக்கென வேற்றுமைமயக்கமாக்கி எனக்கின்னருள் செய்தானென முடிக்க. (௩௯)

தேவருடையைந்தருவின் செந்தேனிறால்கிழிய
மீவருடைபாய்கின்ற வேங்கடமே—மூவடிமண்
போயிரந்தாரத்தர் புணருமொருபதினா
றாயிரந்தாரத்த ரகம்.

இதன்பதப்பொருள்.

தேவருடை-தேவர்களுடைய, ஐந்தருவின்-ஐவகையான கற்பகவிருட்சத்தின், செந்தேனிறால்-செவ்வியதேன்கூடு, கிழிய-உடைய, மீவருடை-மேலேயிருக்கிறவரையாடு, பாய்கின்ற-தாவுகின்ற, வேங்கடமே-திருவேங்கடமலையே, மூவடிமண் மூன்றடிமண்போய், சென்றிரந்தார்-யாசித்தவர், அத்தர்-தந்தையானவர், புணரும் - கூடாநின்ற, ஒருபதினாறாயிரம்-பதினாறாயிரம், தாரத்தர்-தேவிமாரையுடையவர், அகம்-மலை—எ-று. போயிரந்தார்த்தார் புனையுமொருபதினாறாயிரந் தாரத்தாரென்பதூஉம் பாடம். (௪௰)

வன்குறிஞ்சிமாதர்பால் வானோர்மருந்துக்கு
மென்குறிஞ்சித்தேன்மாறும் வேங்கடமே—நன்குறிஞ்சிப்
பேய்த்தனஞ்சுவைத்தார் பிறரக்கமுதீந்தீசனுக்கு
வாய்த்ததனஞ்சுவைத்தார் வரை.

இதன்பதப்பொருள்.

வன்குறிஞ்சி-வலியகுறிஞ்சிநிலத்து, மாதர்பால்-பெண்களாகிய குறத்திகளிடத்திலே, வானோர்-தேவர்கள், மருந்துக்கு - அமிர்தத்துக்கு, மென்குறிஞ்சி-மெல்லியகுறிஞ்சிமரத்தின், தேன்மாறும்-தேனைக்கொள்ளும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நன்கு-நன்றாக, உறிஞ்சி-உறிந்து, பேய்-பேயினுடைய, தனம்-முலையை, சுவைத்தார்-குடித்தா

ர், பிறர்க்கு-மற்றதேவர்க்கு, அமுது-அமிர்தத்தை, ஈந்து-கொடுத்து, ஈசனுக்கு-சிவனுக்கு, வாய்ந்த-பொருந்தின: நஞ்சு-விடத்தை, வைத்தார்-வைத்தவருடைய, வரை-மலை—எ-று. தெற்குப்புயமாறுமாபோல அமுதங்கொடுத்துத் தேன்வாங்குதல பண்டமாற்றுதல. பேயானவள்-பூதனை.

வாவுகவின்மந்திநுகர் மாங்கனிக்குக்கற்பகத்தின்
மேவுகவிகைநீட்டும் வேங்கடமே—தாவுகடல்
வேவவிலங்கைக்கொண்டார் விடணனைவைத்தொழிந்தார்
சாவவில்லங்கைக்கொண்டார் சார்பு.

இதன்பதப்பொருள்.

வாவு-தாவுகின்ற, கவின்-அழகையுடைய, மந்தி-பெண்குரங்கு, நுகர்-தின்னப்பட்ட, மாங்கனிக்கு-மாம்பழத்துக்கு, கற்பகத்தின்-கற்பகவிருக்ஷத்தின், மேவு-பொருந்திய, கவி-குரங்கு, கைநீட்டும்-கையைநீட்டிக்கேட்கும், வேங்கடமே-திருவேங்கடமலையே, தாவுகடல்-உயர்ந்தெழுங்கடல், வேவ-வேகவும், இலங்கைக்கு-இலங்காபுரிக்கு, ஒளி-ஒள்ளிய, தார்-மாலையினையுடைய, விடணனை-விபீடணனை, வைத்து-இருக்கச்செய்து, ஒழிந்தார்-அவனையாளாதவர்கள், சாவ-இறக்குபடி, வில்-வில்லை, அம்-அழகிய, கைக்கொண்டார்-கையிற்கொண்டவர், சார்பு-சாருமிடம்—எ-று. (சஉ)

வெள்ளிபகன்மீதேறி விடர்முளைத்தசெங்காந்தள்
வெள்ளியகல்விளக்காம் வேங்கடமே—வெள்ளியெனும
வேதியனாட்டங்கெடுத்தார் மேதினியைப்பாதலமென்
றோதியநாட்டங்கெடுத்தார் ஊர்.

இதன்பதப்பொருள்.

வெள்ளிபகன்மீது-வெள்ளைக்கல்லினமேலே, ஓர்விடர்-ஓர்கமரிலே, முளைத்த உண்டான, செங்காந்தள்-செவ்வியகாந்தட்பூ, வெள்ளி-வெள்ளியான, அகல்-சகழியின்: விளக்காம்-வைத்த விளக்கைப்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, வெள்ளியெனும-சுக்கிரனை, வேதியன்-பிராமணனுடைய, நாட்டம்-கண்ணை, கெடுத்தார்-கெடுத்தவர், மேதினியை-பூமியை, பாதலமென்று-பாதாளமென்று, ஓதிய-சொல்லப்பட்ட, நாடு-தேசத்திலே, அங்கு-அவ்விடத்திலேநின்று, எடுத்தார்-எடுத்தவருடைய, ஊர்-ஊர்—எ-று. (சங)

அல்லிமலர்க்காந்தளின்மேலாடுஞ்சுரும்பினங்கள்
மெல்லியர்கள்கைக்கழங்காம் வேங்கடமே—மல்லினைப்
பண்டறைந்தவன்படியார் பார்த்தனுக்குத்தத்துவநூல்
விண்டறைந்தவன்புடையார் வெற்பு.

இதன்பதப்பொருள்.

அல்லி-அகவிதழையுடைய, மலர்-மலர்ந்த, காந்தளின்மேல-செங்காந்தளிலே, ஆடும்-ஆடாநின்ற, சுரும்பினங்கள்-வண்டின்கூட்டங்கள், மெல்லியர்கள்-பெண்களுடைய, கைக்கழங்காம்-கையிற்கழச்சிக்காய்போலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, மல்லினை-மல்லரை, பண்டு-முற்காலத்திலே, அறைந்த-அடித்த, வன்படியார்-வலிய

அடிமையுடையவர், பார்த்தனுக்கு - அருச்சுனனுக்கு, தத்துவநூல் - ஞானகீதையை, விண்டு - வெளியிட்டு, அறைந்த - சொன்ன, அன்புடையார் - அன்பையுடையவரது, வெற்பு - மலை — எ-று. (சச)

காந்தளிரவலர்போற் கையேற்பக்கொன்றைகொடை [illegible]
வேந்தனைப்போற்பொன்சொரியும் வேங்கடமே—பூந்துளவின்
கான்மடங்காமார்வத்தார் காணவிரும்பினார்மே
னான்மடங்காமார்வத்தார் நாடு.

இதன்பதப்பொருள்.

காந்தள் - காந்தட்பூவானது, இரவலர்போல் - யாசகரைப்போல, கையேற்ப - கையைவிரிப்ப, கொன்றை - கொன்றைமரமானது, கொடைவேந்தனை - கொடுக்குமரசனைப்போல, பொன்சொரியும் - பொன்போலும் பூவைச்சிந்தும், வேங்கடமே - திருவேங்கடமலையே, பூந்துளவின் - அழகிய திருத்துழாயின், கான்மடங்கா - வாசமொடுங்காத, மார்வத்தார் - மார்பையுடையவர், காணவிரும்பினோர்மேல் - சேவிக்கவிரும்பினோரிடத்திலே, நான்மடங்காம் - நாலுமடங்காகிய, ஆர்வத்தார் - அன்பையுடையவரது, நாடு - நாடு — எ-று. பொன்போலும் பூவைப் பொன்னெனப்பிறைக்கூறினார், காணவிரும்பினார் விரும்பினதொருபங்காக அவரிடத்திலே தாமும் மடங்கதிகமாகக் கிருபைபண்ணப்பட்டவரெனக்கொள்க. (சரு)

நாகத்தின்மேற்குறவர் நன்கெறிந்தமாணிக்க
மேகத்தின்மின்புரையும் வேங்கடமே—மாகத்தின்
மார்த்தாண்டமண்டலத்தார் வாயுண்டுமிழ்ந்தளந்து
காத்தாண்டமண்டலத்தார் காப்பு.

இதன்பதப்பொருள்.

நாகத்தின்மேல் - யானைமேலே, குறவர் - குறவர்கள், நன்கு - நன்றாக, எறிந்த - எறியப்பட்ட, மாணிக்கம் - மாணிக்ககல், மேகத்தின் - மேகத்திலுள்ள, மின்புரையும் - மின்னைப்போலும், வேங்கடமே - திருவேங்கடமலையே, மாகத்தின் - ஆகாயத்துள்ள, மார்த்தாண்டமண்டலத்தார் - சூரியமண்டலத்தையுடையவர், வாயுண்டு - வாயினாலேயுண்டு, உமிழ்ந்து - வெளிப்படுத்தி, அளந்து - அளக்கப்பட்டு, காத்து - இரட்சித்து, ஆண்ட - ஆளப்பட்ட, மண்பூமியாகிய, தலத்தார் - தலத்தையுடையவர், காப்பு - காக்குமிடம் — எ-று. (சசா)

செம்பதுமராகச் சிலைசூழ்பெரும்பாந்தள்
வெம்பரிதியூர்கோளாம் வேங்கடமே—உம்பருல
கோதத்தினப்புறத்தா ரோராலிலைதுயின்றான்
வேதத்தினப்புறத்தான் வெற்பு.

இதன்பதப்பொருள்.

செம்பதுமராகச்சிலை - சிவந்தபதுமராகக்கல்லை, சூழ் - சுற்றிக்கொண்ட, பெரும்பாந்தள் - பெரியமலைப்பாம்பு, வெம்பரிதி - சூரியன்[illegible]னை, ஊர்கோளாம் - சுற்றினபரிவேடம்போலும், வேங்கடமே - திருவேங்கடமலையே, உம்பர் - தேவர்களுடைய (உயர்ந்த) உலகு - [illegible]

து, ஓதத்தின்-குளிர்ச்சியினையுடைய, அப்பு-வெள்ளத்தில், உற-பொருந்த, தான், ஓராலிலை-ஓராலமரத்திலையிலே, துயின்றான் - நித்திரை செய்தவன், வேதத்தின்-வேதத்துக்கு, அப்புறத்தான் - மேலானவனுடைய, வெற்பு-மலை—எ-று. ஆலிலையிற் றுயிலுதலாவது பிரமபிரளயத்தின் மரத்திலையிற் றுயில வேதத்தினப்புறத்தானவது வேதங்களு மொருவார்த்தையாகச் சொல்லாதபடிப் பலபேதமாதலால். (சஎ)

கோலமணிப்பாறையிற்பாய் கோடரங்கள்செங்கதிரோன்
மேலநுமன்பாய்ந்தனைய வேங்கடமே—நாலுமறை
யாய்ந்தபாரதத்துவந்தானானன்குடமாடல்
வாய்ந்தபாரதத்துவந்தான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

கோலம்-அழகிய, மணிப்பாறையில்-இரத்தினக்கல்லின்மேலே, பாய்-தாவாநின்ற, கோடரங்கள்-குரங்குகள், செங்கதிரோன்மேல்-சூரியன்மேலே, அநுமன் பாய்ந்தனைய-ஆஞ்சநேயர் தாவினதுபோலும், வேங்கடமே-திருவேங்கடமலையே, நாலுமறை-நாலுவேதங்களாலும், ஆய்ந்த-விசாரிக்கப்பட்ட, பாரதத்துவந்தானானன்-பாஷியத்து நிருணயந்தானானவன், குடமாடல்-குடக்கூத்தாக, வாய்ந்த-பொருந்தின, பாரதத்து-கூத்திலக்கணத்திலே, உவந்தான் - சந்தோஷித்தவன், வாழ்விடம்—எ-று. அச்செங்கதிரோனென்பதூஉம் குடமாடுமென்பதூஉம் பாடம். (சஅ)

கொம்பினிறால்வாங்கநிமிர் குஞ்சரக்கையம்புலிமேல்
வெம்பியெழுங்கோளரவாம் வேங்கடமே—தும்பிபல
போர்காதுமீர்ந்தார் புனையரக்கிமூக்கினொடு
வார்காதுமீர்ந்தார் வரை.

இதன்பதப்பொருள்.

கொம்பின் - கொம்புகளிலிருக்கும், இறால் - தேன்கூட்டை, வாங்க-வளைக்க, நிமிர்-எடுக்கும், குஞ்சரக்கை-யானையினுடையகை, அம்புலிமேல்-சந்திரனைத்தீண்ட, வெம்பி-கோபித்து, எழும்-எழும்பட்ட, கோளரவாம்-இராகுக்கோள்போலும், வேங்கடமே - திருவேங்கடமலையே, தும்பிபல-பலவண்டுகள், போர்-சண்டைப்பட்டு, காதும்-மோதும், ஈர்ந்தார்-குளிர்ந்தமாலையை, புனை-அணியாநின்ற, அரக்கி - சூர்ப்பணகையாகிய அரக்கி, மூக்கினொடு-மூக்குடனே, வார்-நீண்ட, காது-காதையும், ஈர்ந்தார்-அறுத்தவருடைய, வரை-மலை—எ-று. இளையபெருமாள்செய்ததைப் பெரியபெருமாள்செய்ததாகக்கூறினரென்க. ( )

வண்மைதிகழ்வெண்பளிங்கு வட்டத்தின்கண்டுயின்மான்
விண்மதியின்மானேய்க்கும் வேங்கடமே—யொண்மதியா
னாலைத்தாமோதரனார் நோக்கரியார்துளவ
மாலைத்தாமோதரனார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

வண்மைதிகழ் - வண்மையாயிலங்காநின்ற, வெண்பளிங்கு வட்டத்தில்-வெள்ளைப்பளிங்குக்கல்லின் வட்டத்திலே, கண்டுயின்மான்-கண்

னுறங்காநின்றமான், விண்-ஆகாயத்து, மதியின் - சந்திரனிடத்துள், மான்-மானை, எய்க்கும்-ஒப்பாகும், வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒண்மதியால்-நல்லபுத்தியினாலே, நூல்-ஆகமங்களை, ஓத - சொன்ன, அரனார்-சிவனாலே. நோக்க-காணுதற்கு, அரியார் - பிரயாசமானவர், துளவமாலை-திருத்துழாய்மாலையினையுடைய, தாமோதரனார்-தாமோதரனென்னுந் திருநாமத்தையுடையவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. தாம்-அசைநிலை. (௫௰)

சிலேடைகள். T. 12695

காதலித்துச் சார்ந்தவர்க்குங் காமியத்தைச் சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற்றைத் தவிர்க்கும் வேங்கடமே-போதகத்தை
மோதிமருப்பொசித்தார் முன்பதினாறாயிரவ
ரோதிமருப்பொசித்தாரூர்.

இதன்பதப்பொருள்.

காதலித்து-பரமபதத்தைவிரும்பி, சார்ந்தவர்க்கும் - அடைந்தவர்க்கும், வேதனை-பிரமனையும், கூற்றை-இயமனையும், தவிர்க்கும் - நீக்குமெனவும், காமியத்தை-இம்மைப்பேற்றை, சார்ந்தவர்க்கும்-விரும்பினவர்க்கும், வேதனைக்கூற்றை-வேதனையாகிய கூறுபாட்டை, தவிர்க்கும்-நீக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, போதகத்தை-யானையை, மோதி-முட்டித்து, மருப்பு-கொம்பை, ஒசித்தார்-முறித்தவர், முன்-முற்காலத்திலே, பதினாறாயிரவர்-பதினாறாயிரந்தேவியமார், ஓதி-அளகபாரத்தினது, மரு-வாசனையை, பொசித்தார் - உண்டவருடைய, ஊர்-ஊர்—எ-று. யானையாவது கஞ்சனால் விடப்பட்ட குவலயாபீடம். தலைமயிர்மணத்தைப் பொசித்தலாவது உச்சிமோந்துகொள்ளுதல். (௫௧)

கேள்வித்துறவோருங் கேடறவில்வாழ்வோரும்
வேள்விக்கினமாற்றும் வேங்கடமே—மூள்வித்து
முன்பாரதமுடித்தார் மொய்வேந்தர்வந்தவிய
வன்பாரதமுடித்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

கேள்வி-ஞானநூல்களையறிந்த, துறவோரும்-துறவிகளும், வேள்-மன்மதனால்வரும், விக்கினம்-துன்பத்தை, மாற்றும்-தீர்க்குமெனவும், கேடு-கெடுதல், அற-நீங்க, இல்வாழ்வோரும்-இல்வாழ்பவரும், வேள்விக்கு-யாகஞ்செய்தற்கு, இனம்-இனமானவற்றை, ஆற்றும்-செய்யப்படுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, மூள்வித்து-மூட்டிவித்து, முன்பு-முற்காலத்தில், ஆ-ஆகாநின்ற, ரதம்-இரதத்தையும், முடி-மகுடத்தையும், தார்-மாலையினையுமுடைய, மொய்-வலிமையுள்ள, வேந்தர்வந்து-அரசர்வந்து, அவிய-மடிய, வன்பாரதம்-வலியபாரதப்போரை, முடித்தார்-நிறைவேற்றினவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. இரதமென்பதற்கு ரதமென்றார் வடமொழிவழக்குப்பற்றி. (௫௨)

பொய்யாம்வினையேனைப் போல்வாருமன்பருஞ்செய்
மெய்யாம்வழுத்தேயும் வேங்கடமே—செய்யா
ட்டனத்துவசப்பொற்புள்ளார் தானவரைமோதுஞ்
சினத்துவசப்பொற்புள்ளார் சேர்வு.

இதன்பதப்பொருள்.

பொய்யாம்-பொய்யாகிய, வினையேனைப்போல்வாரும் - தொழிலையுடைய வென்னோடொத்தவரும், மெய்-சரீரத்தில், ஆம்-உண்டாகிய,வழு-குற்றம், தேயும்-நீங்குமெனவும், அன்பரும்-தாசரும், செய்-செய்கின்றமெய்யாம், உண்மையாகிய-வழுத்து-தோத்திரம், ஏயும்-இசையுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, செய்யாள்-பெரியபிராட்டியார், தனத்து-தனத்திலே, வசப்பொற்பு-வசமானபொலிவை, உள்ளார்-உண்டானவர், தானவரை-அசுரரை, மோதும்-கோபிக்கும், சினம்-கோபத்தையுடைய, துவசம்-கொடியான, பொற்புள்ளார்-பொன்னிறப்பறவையையுடையவர், சேர்வு-சேருமிடம்—எ-று. கொடியான பறவையாவது கருடன். (௫௩)

கோடலிலாவுள்ளத்துக் கோதிலடியவரும்
வேடருமங்கைவரைவெல் வேங்கடமே—மூட
மனமாமனைக்கொன்றார் வன்கஞ்சனென்னுஞ்
சினமாமனைக்கொன்றார் சேர்வு.

இதன்பதப்பொருள்.

கோடல்-கோணல், இலா-இல்லாத, உள்ளத்து-இருதயத்தையுடைய, கோதில்-குற்றமில்லாத, அடியவரும்-தாசர்களும், அங்கு-அவ்விடத்து, ஐவரை-பஞ்சேந்திரியங்களை, வெல்-வெல்லுவாரெனவும், வேடரும்-மறவரும், அம்-அழகிய, கைவரை-யானையை, வெல்-வெல்லுவாரெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே,மூடர்-மூடருடைய, மனமாம்-இருதயமாகிய, மனைக்கு-கிரகத்துக்கு, ஒன்றார்-பொருந்தாதவர், வன்கஞ்சனென்னும்-வலியகஞ்சனென்கின்ற, சினம்-கோபத்தையுடைய, மாமனை-அம்மானை, கொன்றார்-கொன்றவர், சேர்வு-சேருமிடம்—எ-று. (௫௪)

மொய்வதனமங்கையர்கண் முன்கையும்யோகியர்கண்
மெய்வயதுமஞ்சுகமார் வேங்கடமே—பெய்வளையார்
பாற்றிருப்பாதஞ்சிவந்தார் பற்றினார்புன்பிறப்பை
மாற்றிருப்பாதஞ்சிவந்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

மொய்-பலமான, வதனம்-முகத்தையுடைய, மங்கையர்கள்-பெண்கள், முன்கையும்-முன்கையிலும், அம்-அழகிய, சுகம்-கிளியை, ஆர்-பொருந்துமெனவும், யோகியர்கள்-நிட்டையுடையவர்கள், மெய்-சரீரத்து, வயதும்-ஆயுளும், அஞ்சு-ஐந்து, உகம்-யுகமாக, ஆர்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பெய்வளையார்பால்-வளையணிந்த, கரத்தினையுடைய-பெண்களிடத்திலே, திருப்பாது-மனதைத்திருப்பப்பண்ணாமல், அஞ்சி-பயந்து, வந்தார்பற்றினார்-தன்னைப், பற்றினவர்களான-ரக்ஷகருடைய, புன்பிறப்பை-புல்லியபிறப்பை

மாற்று-மாற்றுதலைச்செய்து, இரு-இரண்டு, பாதம்-திருவடிகளும், சிவந்தார்-சிவந்தவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. (ருரு)

இல்லக்குறத்தியரும் யாக்கைநிலைவேட்டவரு
மெல்லக்கிழங்கெடுக்கும் வேங்கடமே—நல்ல
புதுப்பூவைவண்ணத்தான் போர்முகத்துச்செவ்வாய்
மதுப்பூவைவண்ணத்தான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

இல்லம்-வீட்டிலிருக்கும், குறத்தியரும்-குறப்பெண்களும், மெல்ல-மென்றுதின்ன, கிழங்கெடுக்கும்-கிழங்கைப்பிடுங்கப்பட்ட வெனவும், யாக்கை-சரீரத்தை, நிலை-நிலைபெற, வேட்டவரும்-விரும்பினசித்தர்களும், மெல்ல-மெத்தெனை, கிழம்-மூப்பை, கெடுக்கும்-துறக்கப்பட்ட வெனவுமான, வெங்கடமே-திருவேங்கடமலையே, நல்ல-நலமுடைய,புது-புதிய, பூவைவண்ணத்தான்-காயாம்பூநிறத்தையுடையவன், போர்முகத்து-பொருதுமிடத்து, செவ்வாய்-சிவந்தவாயான, மதுப்பூ-பரிமளப்பூவிலேவைக்கப்பட்ட, வள்-வளமையுடைய, நத்தான்-சங்கையுடையவன், வாழ்வு-வாழுமிடம்—எ-று. வாயாகியபூ என்றது உருவகம். (ருசு)

தேனியலுங்கூந்தலார் செங்கரமுமாதவத்தோர்
மேனியுமையம்பொழியும் வேங்கடமே—ஞானியர்க
டாங்குறியெட்டக்கரத்தார்தாளுரன்மேல்வைத்துவெண்ணெய்
தாங்குறியெட்டக்கரத்தார் சார்வு.

இதன்பதப்பொருள்.

தேன்-மணம், இயலும்-பொருந்தும், கூந்தலார் - அளகபாரத்தையுடையபெண்களது, செங்கரமும்-சிவந்தகையும், ஐயம்பொழியும்-பிச்சைமிகுதியும்பொழியுமெனவும், மாதவத்தோர்-பெருமைபொருந்திய தவத்தையுடையோர்களது, மேனியும்-சரீரமும், ஐயம்பு-பஞ்சபாணங்களை, ஒழியும்-பொருந்தாதெனவுமான, வேங்கடமே- திருவேங்கடமலையே, ஞானியர்கள்-அறிவுள்ளவர்கள், தாம்-தாங்கள், குறி-குறிக்கப்பட்ட, எட்டக்கரத்தார்-அட்டாக்கரத்தையுடையவர், தாள்-திருவடியை, உரன்மேல்-உரலின்மேலே, வைத்து-வைத்து, வெண்ணெய்-வெண்ணெய்யை, தாங்கு-தாங்காநின்ற, உறி-உறியை,எட்டு-எட்டப்பட்ட, அக்கரத்தார் - அந்தக்கையையுடையவர், சார்வு - சாருமிடம்—எ-று. எட்டெழுத்தாவது திருமந்திரம். (ருஎ)

காணையிலார்சொற்கேட்ட கந்திருவருந்தவரும்
வீணையிராகத்தைவிடும் வேங்கடமே—கோணை
யிருங்குண்டையோட்டினுனேற்பொழுதான்கூனின்
மருங்குண்டையோட்டினான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

காண-பார்க்கும், ஐயிலார்-வேலாகிய கண்களையுடையவரான பெண்கள், சொற்கேட்ட-வார்த்தையைக்கேட்ட, கந்திருவரும் - யாழ்த்தேவரும், வீணை-யாழினுடைய, இராகத்தை-சங்கீதத்தை, விடும்-விடப்பட்டதெனவும், தவரும்-இருடிகளும், வீணை-வெறுப்பையும், இரா

கத்தை-விருப்பையும், விடும்-விடப்பட்டதெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கோணை-பலத்தையுடைய, இருங்குண்டை-பெரியகாளையை, ஓட்டினான்-ஊரப்பட்டவனது, ஏற்பு - இரக்குந்தொழிலை, ஒழித்தான்-நீக்கினவன், கூனின்மருங்கு-கூனையுடையவளான மந்தரையிடத்து, உண்டை-உண்டையை, ஓட்டினான்-ஓடப்பண்ணினவன், வாழ்வு-வாழுமிடம்—எ-று. காணையிலாரென்பது தொழில்பற்றிய உவமையாய்க் கண்ணெனப்பட்டது, இரப்பொழித்தது கபாலமோட்சம், உண்டையோட்டினானென்பதற்கு வில்லாலே தெறியுண்டையைத் தெறித்தானென்றுமாம். (௫௮)

முந்நூன்மறையவரு மூதரம்பைமாருநடு
மெய்ந்நூனலங்கவரும் வேங்கடமே—பொய்ந்நூலா
மச்சமயக்கத்தினா ராதரிக்கத்தெய்வங்கள்
வச்சமயக்கத்தினார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

முந்நூல்-முப்புரிநூல்தரித்த, மறையவரும்-வேதத்தையுடைய பிராமணரும், நடு-பொதுவாகியும், மெய்-உண்மையாகியு மிருக்கிற,நூல் சாத்திரங்களின், நலம்-தன்மையை, கவரும்-விரும்புமெனவும், மூதரம்பைமாரும்-முதிர்ந்ததெய்வப்பெண்கள், நடு-இடையாகிய, மெய்-சரீரம், நூல்-நூலினுடைய, நலம்-அழகை, கவரும்-கிரகிக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பொய்ந்நூலாம்-பொய்யானசாத்திரமாகிய, அச்சமயக்கத்தினார்-அச்சமயப்பிணக்கர், ஆதரிக்க-அங்கீகரிக்க, தெய்வங்கள்-தேவர்கள், வச்ச-இருத்தின, மயக்கத்தினார்-மருள்கைக்குள்ளானவருடைய, வாழ்வு-வாழுமிடம்—எ-று. பொய்ச்சாத்திரமாவது பரத்துவமல்லாத தேவரைப் பரத்துவமென்று சொல்லுநூலாம், அச்சமயமாவது அந்தப்பொய்யையுடைய வச்சமயமாம், தெய்வங்கள் வச்சமயக்கமாவது பரனுந்தன்னைப் பரனல்லனெனக் கூறினபடிக்குத்தானுமிருத்தலாம். (௫௯)

ஓதுமறையோர்புரமு முள்ளுங்கலையினரு
மேதையகலாவிருக்கும் வேங்கடமே—கோதைகுழற்
கற்றாததாரணியார் தூயதிருத்தாளூன்றப்
பற்றாததாரணியார் பற்று.

இதன்பதப்பொருள்.

ஓதும்-அத்தியயனம்பண்ணுகின்ற, மறையோர்-பிராமணருடைய,புரமும்-சரீரமும், கலையின்-மானினுடைய, மேதை-தோல், அகலாவிருக்கும்-நீங்காதிருக்குமெனவும், உள்ளும்-அவர்களிருதயமும், கலையின்-சாத்திரங்களினது, அரும்-அரிய, மேதை-அறிவு, அகலாவிருக்கும் நீங்காதிருக்குமெனவும், வேங்கடமே-திருவேங்கடமலையே, கோதை-சூடிக்கொடுத்தநாச்சியார், குழல்-அளகபாரத்திலே, சுற்றாத-அணியாத, தார்-மாலையை, அணியார்-அணியாதவர், தூய-பரிசுத்தமான, திருத்தாள்-திருவடிகளை, ஊன்ற-நிறுத்த, பற்றாத-போதாத, தாரணியார்-பூமியையுடையவருடைய,பற்று-பற்றுமிடம்—எ-று. சுற்றாததாரணியாவது கோதைநாயகியணிந்த திருமாலையைவிட்டு வேறேதிரு

மாலையைச்சேர்த்துப் பெரியாழ்வார் வடபத்திரசாய்க்குச்சமர்ப்பிக்க அதைப்பெருமாள் இந்தமாலைகோதை மணமில்லையென்று வெறுத்த து பற்றுததாரணியாரென்பது பூமியளந்தாள் பூமியிலுந் திருவடிகள் விரிந்ததென்பதாம் பூமியையாசித்து வாங்கினாரென்பதால் தாரணியை யுடையவரென்றார். (சுய)

நன்முலைபோல்வெண்ணகையார் நாயகர்மேல்வைத்தநெஞ்சு
மென்முலையுங்கற்புரஞ்சேர் வேங்கடமே—முன்மலைந்து
தோற்றமாரீசனார் தோற்றமாயம்புரிய
சீற்றமாரீசனார் சேர்வு.

இதன்பதப்பொருள்.

நல்-நல்ல, முலைபோல்-முல்லைப்பூப்போலும், வெள்-வெண்மையாகிய, நகையார்-முறுவலையுடையபெண்கள், நாயகர்மேல்வைத்த-கணவரிடத்தில்வைத்த, நெஞ்சும்-மனமும், கற்பு-கற்பினாலே, உரஞ்சேர்-பலம்பொருந்துமெனவும், மெல்-மெலவிய, முலையும்-தனங்களும், கற்புரஞ்சேர்- கர்ப்புரமணியப்படுமெனவுமான, வேங்கடமே-வேங்கடமலையே, முன்-முற்காலத்தில், மலைந்து-எதிர்ந்து, தோற்ற-வெலலாமல தோற்றோடின, மாரீசன்தோற்ற-பின்னும்வந்து, மாயம்புரிய-வஞ்சனைபண்ண, சீற்றம்-கோபம், ஆர்-பொருந்தின, ஈசனார்-சுவாமி, சேர்வு-சேருமிடம—எ-று. முன்மலைந்துதோற்றது விசுவாமித்திரர் யாகத்தில்வந்து ஓடிப்போனதாம். மாயம்புரிந்தது பொன்மானாகவந்ததாம். பின்என்பது அவாநிலையாய்க்கொள்க. சீற்றமார்ந்தது சங்கரித்தாரென்றது. சிறுமையாற் றப்பவிட்டாரென்பது குறிப்பு. (சுக)

கூறுங்கிளிமொழியார் கொங்கையென்றுங்கணணென்றும
வீறுமருப்பிணைசேர் வேங்கடமே—நாறுந்
துளவமலர்க்கண்ணியார தொண்டாய்த்தமக்கன்
புளவமலர்க்கண்ணியாரூர்.

இதன்பதப்பொருள்.

கூறும-சொல்லப்பட்ட, கிளிமொழியார்-கிளிபோலும் வார்த்தையுடையபெண்கள், கொங்கையென்றும-தனங்களும்,வீறு-பெருமைபொருந்திய, மருப்பு-யானைக்கொம்பின், இணை-இரட்டை, சேர்-பொருந்தினவெனவும, கண்ணென்றும-அவர்களுடைய கணகளும், வீறும்-வளர்தல், மரு-பொருந்திய, பிணை-பெணயானை, சேர்-பொருந்தினவெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நாறும்-பரிமளியாநின்ற, துவளமலர்க்கண்ணியார-திருத்துளவமாலையினையுடையவர், தொண்டாய்-அடிமையாய், தமக்கு-தமமிடத்திலே, அன்பு-விசுவாசம், உள-உண்டான, அமலர்க்கு-பரிசுத்தமானதாசருக்கு, அண்ணியார்-சமீபமானவருடைய, ஊர்-ஊர்—எ-று. (சுஉ)

மாதரம்பொன்மேனி வடிவுமவர்குறங்கு
மீதரம்பையைப்பழிக்கும் வேங்கடமே—பூதமைந்தின்
பம்பரமாகாயத்தார் பாடினல்வீடருளு
மம்பரமாகாயத்தார் நாடு.

இதன்பதப்பொருள்.

மாதர்-பெண்களுடைய, அம்-அழகிய, பொன்மேனிவடிவும்-பொலிவுபெற்றசரீரவுருவமும், மீது-உயர்ந்த, அரம்பையை - அரம்பையான தெய்வப்பெண்களை, பழிக்கும்-பழிக்குமெனவும், அவர்குறங்கும்-அவருடையதுடையும், மீது-உயர்ந்த, அரம்பையை-வாழையை, பழிக்கும்-பழிக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பூதமைந்தின்-பஞ்சபூதங்களினாலாக்கப்படும், பம்பரம்-பம்பரம்போற் சுழலாநின்றுமிருக்கிற, மா-பெரிய, காயத்தார்-சரீரத்தையுடையவர், பாடினால்-துதித்தால், வீடருளும்-முத்திகொடுக்கும், நம்-நம்முடைய, பரமாகாயத்தார்-பரமாகாயமான பரமபதத்தையுடையவருடைய, நாடு-ஊர்—எ-று. (௬௩)

கோள்காவுகற்றவிழிக் கோதையர்கள்பொற்றாளும்
வெள்கரமுமம்பஞ்சார் வேங்கடமே—நீள்கரனார்
தூடணனார்முத்தலையார் துஞ்சவெய்துதுஞ்சாரைக்
கூடண்ணார்முத்தலையார் குன்று.

இதன்பதப்பொருள்.

கோள்-கொள்ளப்பட்ட, காவு-களவை, கற்ற-பயின்ற, விழி-கண்ணையுடைய, கோதையர்கள்-பெண்கள், பொற்றாளும் - பொலிவையுடையகால்களும், அம்-அழகிய, பஞ்சு-செம்பஞ்சு, ஆர்-பொருந்துமெனவும், வெள்-மன்மதனுடைய, கரமும்-கையும், அம்பஞ்சார்-பஞ்சபாணம்பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நீள்-நெடிய, கரனார்-கரனும், தூடணனார்-தூடணனும், முத்தலையார்-திரிசிரரவும், துஞ்ச-சாக, எய்து-அம்புவிட்டு, துஞ்சாரை-உறங்காதவிளையபெருமாளை, கூடு-சேர்ந்த, அண்ணார்-அண்ணனான பெருமானுடைய, முத்து-முத்துகள், அலை-அருவிகளினலைபாவது, ஆர்-ஒலித்துக்கொண்டிருக்கின்ற, குன்று-மலை—எ-று. (௬௪)

கோங்கைக்கோடேறிக் குலுக்குமரியுங்கரியும்
வேங்கைகோடாதரிக்கும் வேங்கடமே—பூங்கைக்குள்
மெய்த்தவளச்சங்கெடுத்தார் மேகலைவிட்டங்கைதலை
வைத்தவளச்சங்கெடுத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

கோங்கை-கோங்குமரத்து, கோடு-கொம்பினிடத்திலே, ஏறி-ஏறுதலைச்செய்து, குலுக்கும்-அசையப்பண்ணும், அரியும்-குரங்கும், வேங்கைக்கோடு-வேங்கைமரத்தின்கொம்பை, ஆதரிக்கும்-பிடிக்குமெனவும், கரியும்-யானையும், வேங்கைக்கு-புலிக்குபயந்து, ஓடாது-ஓடாமல், ஆதரிக்கும்-நிற்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பூம்-பொலிவுபெற்ற, கைக்குள்-கையினிடத்து, மெய்-உருவு, தவளம்-வெண்மையான, சங்கு-சங்கத்தை, எடுத்தார்-ஏந்தினவர், மேகலைவிட்டு-அரைநூன்மாலையைநீக்கி, அம்-அழகிய, கை-கையை, தலைவைத்தவள்-சிரசின்மீதுவைத்தவளுடைய, அச்சம்-பயத்தை, கெடுத்தார்-நீக்கினவருடைய, வாழ்வு-வாழுமிடம்—எ-று. (௬௫)

மாவிற்குயிலு மயிலுமொளிசெய்ய
மேவிப்புயறவழும் வேங்கடமே—ஆவிக்கு
ளானவருடந்தடுத்தா ரானிரைக்காக்குன்றேந்தி
வானவருடந்தடுத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

மாவில்-மாமரத்தில், குயிலும்-கோகிலமும், ஒளிசெய்ய-மறைதலைச்செய்ய, மேவி-பொருந்தி, புயல்-மேகம், தவழும்-ஊருமெனவும், மயிலும்-மஞ்ஞையும், ஒளிசெய்ய-பிரகாசித்தலைச்செய்ய, மேவி-பொருந்தி, புயல்-மேகம், தவழும்-சஞ்சரிக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஆவிக்குளான-என்னுயிருக்குள்ளாகிய, அருள்-கிருபை, தந்து-கொடுத்து, அடுத்தார்-சேர்ந்தவர், ஆனிரைக்கா-பசுக்கூட்டங்களுக்காக, குன்று-மலையை, ஏந்தி-எடுத்து, வானவருடம்-ஆகாயத்துமழையை, தடுத்தார் - விலக்கினவருடைய, வாழ்வு-வாழுமிடம்—எ-று. (௬௬)

கானோடருவி கனகமுமுத்துந்தள்ளி
மீனோவெனக்கொழிக்கும் வேங்கடமே—வானோர்கள்
மேகனயனங்கொண்டார் வேணியரன்கண்டரியார்
காகனயனங்கொண்டார் காப்பு.

இதன்பதப்பொருள்.

கான்-காட்டில், ஓடு-ஓடுகின்ற, அருவி-அருவிகளானவை, கனகமும்-சொர்ணத்தையும், முத்தும்-முத்தையும், தள்ளி - நீக்கி, மீனோவென-நட்சத்திரமோவென்று சொல்லத்தக்கதாக, கொழிக்கும்-இருபுறமுமொதுக்குமெனவும், மீ-மேலாகிய, நோவு-நோவை, எனக்கு-என்றனுக்கு, ஒழிக்கும்-நீக்குமெனவுமான, வேங்கடமே - திருவேங்கடமலையே, வானோர்கள்-தேவர்கள், மேகன் - மேகவாகனனாகிய இந்திரன், அயன்-பிரமன், அம்-கங்கையை, கொண்டு - தரித்துக்கொண்டு, ஆர்-ஆத்திமாலையைச்சூடிய, வேணி-சடையினையுடைய, அரன்-சிவன், காண்டு-இவர்களாலே காண்டற்கு, அரியார்-அரிதானவர், காகன்-காகாசுரனுடைய, நயனம்-கண்ணை, கொண்டார் - அம்பினாற்பறித்துக்கொண்டவருடைய, காப்பு-காக்குமிடம்—எ-று. (௬௭)

கண்டடைந்தவானவருங் காந்தட்குலமலரும்
விண்டவிர்ந்துநிற்கின்ற வேங்கடமே—தொண்டருக்கு
வைகுந்தநாட்டான் மருதினிடைபோதவழும்
வைகுந்தநாட்டான் வரை.

இதன்பதப்பொருள்.

கண்டு-இம்மலையைக்கண்டு, அடைந்த-வந்த, வானவரும் - தேவரும், விண்-தேவலோகத்தை, தவிர்ந்து-நீங்கி, நிற்கின்ற-நிற்கின்றார்களெனவும், காந்தட்குலமலரும்-காந்தட்சாதிப்பூவும், விண்டு-வாய்விண்டு, அவிர்ந்து-மலர்ந்து, நிற்கின்ற-நிற்கின்றவெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தொண்டருக்கு-தாசருக்கு, வை-கூரிய, குந்த-வாளாயுதத்தை, நாட்டான்-இயமனொட்டாமற் பண்ணுகிறவன், மருதி

ன்-மருதமரமிரண்டின், இடையே-நடுவே, தவழும்-ஊறுகின்ற-வைகுந்தநாட்டான்-திருவைகுந்த நாட்டையுடையவனது,வரை-மலை-எ-று.

வாழும்புலியிறொடு வானூர்தினகரனும்
வேழங்களும்வலஞ்செய் வேங்கடமே—ஊழின்கட்
சற்றாயினுமினியான் சாராவகையருளு
நற்றாயினுமினியா ளூடு.

இதன்பதப்பொருள்.

வாழ்-இன்பம்பொருந்தின, அம்புலியிறொடு-சந்திரனுடனே, வான்-ஆகாயத்தில், ஊர்-சஞ்சரிக்கின்ற, தினகரனும்-சூரியனும், வலஞ்செய்-பிரதக்ஷணம் வருவானெனவும், வேழங்களும்-யானைகளும், வலஞ்செய்-வலஞ்செய்யுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஊழின்கண்-பிரபஞ்சத்திலே, சற்றாயினும்-சிறிதாயினும், இனி-இனிமேல், யான்-நான், சாராவகை-பொருந்தாதபடி, அருளும்-கிருபையண்ணும், நற்றாயினும்-நல்லதாயினும், இனியான்-நல்லவனானவனுடைய, நாடு-தேசம்—எ-று. (௬௬)

தாட்கமலப்பூஞ்சுனைக்குஞ் சாயகங்கள்கொய்துதிரி
வேட்கும்வடிவில்லா வேங்கடமே—வாட்கலிய
னாவியப்பாம்பாட்டினார் நச்சுமடுவைக்கலக்கித்
தாவியப்பாம்பாட்டினார் சார்பு.

இதன்பதப்பொருள்.

தாள்-நாளத்தோடுற்ற, கமலப்பூ - தாமரைப்பூவையுடைய, சுனைக்கும்-சுனையினிடத்திருக்குஞ்சலங்கள், வடிவிலலா-வற்றாவெனவும்,சாயங்கள்-அம்புகள், கொய்து-பறித்து, திரி-சஞ்சரிக்கின்ற, வேட்கும்-மன்மதனுக்கும், வடிவு-உருபம், இல்லா-இல்லையெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, வாள்-வாளையுடைய், கலியன்-திருமங்கையாழ்வானுடைய, நா-நாக்கிலான, வியப்பாம - அதிசயமுள்ள, பாட்டினார்-பாசுரத்தையுடையவர், நச்சு-விடமபொருந்திய, மடுவை - பொய்கையை, கலக்கி-கலங்கப்பண்ணி, தாவி-எழுந்து, அப்பாம்பு-அந்தப்பாம்பை, ஆட்டினார்-ஆடப்பண்ணினவர், சார்பு-சாருமிடம்—எ-று. அந்நிலப்பொருளுடனே பெலவாநிலத்துக்கும் பொதுபபொருளான அமைசதினையுங்கூட்டினது அவன்பலவிடத்துக் காமிபத்தைபபுசிக்கும் குதிசஞ்சரிப்பானென்பதுபற்றியென்க. பாம்பாட்டினானென்பதற்கு படம்மை யலையப்பண்ணினானென்பதாம் அல்லது பாம்பிலாடின கூத்தையுடையவனென்றாலுமொக்கும். (௬எ)

ஆயுந்துறவறத்தை யண்டினமுத்தண்டினரும்
வேயுங்கிளைவிட்ட வேங்கடமே—தோயுந்
தவிர்க்காத்தாங்கட்டுண்டார் தாரணிபிறந்த
[illegible]ர்க்காத்தாங்கட்டுண்டா ரூர்.

இதன்பதப்பொருள்.

ஆயும்-விசாரிக்கப்பட்ட, துறவறத்தை-சந்நியாசிதன்மத்தை, அண்டினபொருந்தின, முத்தண்டினரும்-திரிதண்டிகளும், கிளை - சுற்றங்களை, விட்ட-நீக்குவரெனவும், வேயும்-மூங்கிலும், கிளைவிட்ட-கிளைகளைவிடுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தோயும் - உறைபொருந்தப்பட்ட, தயிர்க்கா-தயிருக்காக, தாம்-தாமே, கட்டுண்டார்-கட்டுப்பட்டவர், தாரணியில்-பூமியில், தந்த-உண்டாக்கின, உயிர்-உயிர்களை, காத்து-இரக்ஷித்து, ஆங்கு-அவ்விடத்திலே, அட்டு-கெடுத்து, உண்டார்-புசித்தவருடைய, ஊர்-பதி—எ-று. (எக)

தொண்டொடுமெய்யன்புடையார் தூய்மனமுஞ்சந்தனமும்
விண்டொடுபொற்பாம்பணைசேர்வேங்கடமே-தண்டொடுவாள்
கோலமருங்கார்முகத்தார் கோடாழியார்குழையின்
கோலமருங்கார்முகத்தார் குன்று.

இதன்பதப்பொருள்.

தொண்டொடு-கயிங்கரியத்தோடு, மெய் - உண்மையாகிய, அன்புடையார்-அன்பினையுடையதாசரது, தூய்-பரிசுத்தமான, மனமும்-இருதயமும், விண்டொடு-பெருமானுடனே, பொன் - அழகான, பாம்பணை-அனந்தசயனத்தை, சேர-கினைக்குமெனவும், சந்தனமும்-சந்தனமரமும், விண்-ஆகாயத்தை, தொடு-தீண்டும், பொற்பாம்-பொலிவான, பணை-கொம்புகளை, சேர் - பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தண்டொடு-தடியுடனே, வாள்-வாளாயுதமும், கோல்-அம்பும், அமரும்-பொருந்தும், கார்முகத்தார் - வில்லையுடையவர், கோடு-சங்கு, ஆழி-சக்கரம், ஆர்-இவ்விரண்டையும்பொருந்தினவர், குழையின்-குண்டலத்தின், கோலம்-அழகு, மருங்கு - பக்கத்திலே, ஆர்-பொருந்தின, திருமுகத்தார் - திருமுகத்தினையுடையவரது, குன்று-மலை—எ-று. (எஉ)

கிட்டுநெறியோகிபருங் கிள்ளைகளுந்தங்கூடு
விட்டுமறுகூட்டையும் வேங்கடமே—எட்டுமத
மாவென்றுவந்தான் வாநாளைவாவின்று
போவென்றுவந்தான் பொருப்பு.

இதன்பதப்பொருள்.

கிட்டு-சமீபித்த, நெறி-மோக்ஷநெறியினுடைய, யோகியரும்-தபோதனர்களும், தம்-தம்முடைய, கூடு-சரீரத்தைவிட்டு, நீக்கி-மறுவேறு, கூடு-சரீரத்தை, அடையும்-பொருந்துவரெனவும், கிள்ளைகளும்-கிளிப்பிள்ளைகளும், தங்கூடு-தாங்களிருந்தகூடு, விட்டு-நீங்கி, மறுகூடு-வீதியிலே, அடையும்-செல்லுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, மதம்-மதத்தினுடைய, எட்டுமா - அஷ்டகஜங்களை, வென்று-தோற்கப்பண்ணி, வந்தான்-மீண்டவனுனவிராவணன், வர-வரும்படி, இன்றுபோ-இன்றுகழித்து, நாளைவாவென்று - நாளையதினம்வருகவென்றுசொல்லி, உவந்தான் - சந்தோஷித்தவனுடைய, பொருப்பு-மலை

—எ-று. யோகியர்கள் மறுகூடடைதலாவது, பரகாயப்பிரவேசம். நாளைவாவென்றது, இராமாயணத்தில் முதனாள்யுத்தத்தின்கதை. இராவணனை முனிந்துகொல்லாதுவிடுத்ததினாலுவந்தானென்றார். (எங)

மட்டுவளர்சாரலினு மாதவத்தோர்சிந்தையினும்
விட்டுமதிவிளங்கும் வேங்கடமே—சுட்டுசடை
நீர்க்கங்கையேற்றா னிரப்பொழித்தானீள்குறளாய்ப்
பார்க்கங்கையேற்றான் பதி.

இதன்பதப்பொருள்.

மட்டு-மணம், வளர்-வளரப்பட்ட, சாரலினும்-மலைப்பக்கலினும், விட்டு-வெளியாய், மதி-சந்திரன், விளங்கு-பிரகாசிக்குமெனவும், மாதவத்தோர்-இருடிகள், சிந்தையினும்-மனதினும், விட்டு - நாராயணனை, மதி-புத்தி, விளங்கும்-துலங்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, சுட்டுசடை-சுற்றிமுடிக்குஞ்சடையில், நீர்-சலமான, கங்கை-கங்காதேவியை, ஏற்றான்-தரித்தவனுடைய, இரப்பு - வெறுமையை, ஒழித்தான்-தீர்த்தவன், நீள்-நெடுமையாகத்தக்க, குறளாய்-வாமனவதாரமாய், பார்க்கு-பூமிக்கு, அம் - அழகிய, கை-கையை, ஏற்றான்-ஏந்தினவனுடைய, பதி-ஊர்—எ-று. கங்கையேற்றானிரப்பாவது, கபாலமேந்தியிரந்தது. குறளாவது, வாமனவதாரம். பின்பு வளர்ந்தாராதலின் நீள்குறளாயென்றார். விஷ்ணுஎன்னும் வடமொழி விட்டுவெனநின்றது. (எ௪)

புக்கவருமாதவரும் பூமதுவுண்வண்டினமு
மெய்க்கவசம்பூண்டிருக்கும் வேங்கடமே—ஒக்கவெனை
யன்பதினாலாண்டா னரிவையொடுகானுறைந்த
வன்பதினாலாண்டான் வரை.

இதன்பதப்பொருள்.

புக்க-புகுதற்கு, அரும்-அரிதாகிய, மாதவரும்-மகாதபோதனர்களும், மெய்க்கு-உண்மையானவஸ்துவுக்கு, அவசம்பூண்டிருக்கும்-தங்கள்வசமழிந்து பரவசம்பூண்டிருப்பார்களெனவும், பூ - பூவிலிருக்கிற, மது-தேனை, உண்-குடிக்கிற, வண்டு-வண்டுகளுடைய, இனமும்-கூட்டங்களும், மெய்-அப்பூவினுடைய தாதுகளை, கவசம்-தங்கள்சரீரத்துக்குக் கவசமாக, பூண்டிருக்கும் - கொண்டிருக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, ஒக்கவெனை - ஒருமிக்கஎன்னை, அன்பதினால்-அம்பினாலே, ஆண்டான்-ஆட்கொண்டவனுடைய, அரிவையொடு-பெரியபிராட்டியாரோடு, கானுறைந்த-காட்டிலிருந்த, வன்-வலிய, பதினால் - பதினான்கு, ஆண்டான் - வருஷத்தையுடையவனது, வரைமலை—எ-று. (எரு)

தக்கமறையோர்நாவுந் தண்சாரலின்புடையு

பூண்டார்க்குமாறுடைத்தார் பொங்கோதநீரடைத்து
மீண்டார்க்குமாறுடைத்தார் வெற்பு.

இதன்பதப்பொருள்.

தக்க-தகுதியையுற்ற. மறையோர்-பிராமணருடைய, நாவும் - நாவினிடத்தும், மனுவிளையும்-மனுக்கியான முண்டாமெனவும், தண்-குளிர்ந்த, சாரலின்புடையும்-மலைப்பக்கத்திலும், மிக்க-மிகுந்த, மனு-மனுஷர், விளையும்-சஞ்சரிக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, அக்கு-சங்குமணியும், அரவம்-பாம்பும், பூண்டார்க்கு-தரித்தவராகியசிவனுக்கு, மால்-மயக்கத்தை, துடைத்தார்-தீர்த்தவர், பொங்கு-மிகுந்த, ஓதம்-திரையினையுடைய, நீர் - ஜலமாகியகடலை, அடைத்து-அடைக்கப்பட்டு, மீண்டார்க்கும்-திரும்பினவர்கட்கும், ஆறு-வழியாக, உடைத்தார்-உடைத்தவருடைய, வெற்பு-மலை—எ-று. சிவனுக்கு மயக்கந்துடைத்தலாவது, காபாலமோட்சம். ஆறாகஉடைத்தலாவது, திருவணைகட்டி இலங்கையிற்போய் போர்வென்று மீண்டதன்பின் அத்திருவணையை வில்லினாலே கீறியழித்தது.. (எசு)

நீடுகொடிமுடியி னீதிநெறிவேதியர்கள்
வீடுமகமருவும் வேங்கடமே—கோடுங்
கருத்துளவமாலையான் காணாமனின்ற
மருத்துளவமாலையான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

நீடு-உயர்ந்த, கொடிமுடியும்-மலையினதுச்சியும், மகம் - மகாநட்சத்திரத்தை, மருவும்-தொடுமெனவும், நீதிநெறி-தருமவழியினையுடைய, வேதியர்கள்-அந்தணர்களினது, வீடும்-கிரகமும், மகம்-யாகத்தை, மருவும் - பொருந்துமெனவுமான, வேங்கடமே - திருவேங்கடமலையே, கோடும்-கோணிய, கருத்துள்-மனதினிடத்து, அவமாலையான்-அவமான வொழுங்கையுடையவனாகிய நான், காணாமல்-பாராமல், நின்ற-என்கருத்துநின்ற, மரு-வாசத்தையுடைய, துளவமாலையான்-திருத்துளவ மாலையையுடையவன், வாழ்வு-வாழுமிடம்—எ-று. (எஎ)

சீதங்கொள்சாரலினுஞ் சீர்மறையோரில்லிடத்தும்
வேதங்கணால்வளரும் வேங்கடமே—போதன்
சிரித்துப்புரந்துவைத்தான் தேவரொடுமண்டம்
விரித்துப்புரந்துடைத்தான் வீடு.

இதன்பதப்பொருள்.

சீதம்-குளிர்ச்சி, கொள்-கொண்டிருக்கிற, சாரலினும்-மலைப்பக்கத்திலும், வே-மூங்கில், தம்-தம்முடைய, கணால்-கணாவினால், வளரும்-வளரப்படுமெனவும், சீர்-சிறப்புப்பொருந்திய, மறையோர்-பிராமணருடைய, இலவிடத்தும்-வீட்டினிடத்தும், வேதங்கணால்-வேதங்கள் நான்கும், வளரும்-அதிகரிக்குமெனவுமான. வேங்கடமே-திருவேங்க

மலையே, போதன்-பிரமனும், சிரித்து-நகைத்து, புரம்-முப்புரங்களை, சுடைத்தான்-எரித்தவனாகிய சிவனும், தேவரொடும் - தேவர்களோடுங்கூட, அண்டம்-அண்டங்களை, விரித்து-படைத்து, புரந்து-காத்து, உடைத்தான்-கெடுத்தவனுடைய, வீடு-பதி—எ-று. (எஅ)

நன்கோடுபோலுமுலை நாரியருஞ்சண்பகத்தின்
மென்கோடுங்கற்பகஞ்சேர் வேங்கடமே—வன்கோடு
கூரிருவராகனை கோகநகைபூமியென்னு
மோரிருவராகனூர்.

இதன்பதப்பொருள்.

நன்கோடுபோலும்-நல்லகொம்புபோலும், முலை-தனத்தினையுடைய, நாரியரும்-பெண்களும், கற்பு-கற்புடைமையை, அகம்-மனதிலே, சேர்-பொருந்துவனவும், சண்பகத்தின்-சண்பகமரத்தினது, மென்கோடும்-மெல்லியகொம்புகளும், கற்பகஞ்சேர்-கற்பகவிருக்ஷத்தைத் தொடுவனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கூர்-கூர்மையான, வன்கோடு-வலியகோட்டினையுடைய, இரு-பெருமைபொருந்திய, வராகனார்-வராகவதாரத்தையுடையவர், கோகநகை-பெரியபிராட்டியாரும், பூமி-பூமிப்பிராட்டியாரும், என்னும்-என்றுசொல்லிய, ஓரிருவர்-இரண்டுதேவிமாரும்பொருந்தின, ஆகனார்-திருமேனியுடையவரது, ஊர்-பதி—எ-று. (எகூ)

கோடஞ்சுங்கோதையர்கள் கொங்கையினுங்குஞ்சரத்தும்
வேடன்சரந்துரக்கும் வேங்கடமே—சேடனெனு
மோர்பன்னகத்திடந்தா னூற்றானிரணியனைக்
கூர்பன்னகத்திடந்தான் குன்று.

இதன்பதப்பொருள்.

கோடு-மலை, அஞ்சும்-பயப்படும், கோதையர்கள் - பெண்களுடைய, கொங்கையினும்-தனத்தினிடத்தும், வேள்-மன்மதன், தன்-தன்னுடைய, சரம்-அம்புகளை, துரக்கும்-விடுவானெனவும், குஞ்சரத்தும்-இயானையினிடத்தும், வேடன்-வேடனானவன், தன்சரந்துரக்கும்-தன்னம்புவிடுவானெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, சேடனும்-ஆதிசேடனென்று சொல்லப்பட்ட, ஓர்பன்னகத்திடம் - ஓர்பாம்பினிடத்தில், தானூற்றான்-தான்பொருந்தினவன், இரணியனை-இரணியனனவசுரனை, கூர்-கூர்மையான, பல்-பல்லாகிய, நகத்து-உகிர்களினாலே, இடந்தான்-பிளந்தவனுடைய, குன்று-மலை—எ-று. (அய)

நாரியர்தங்கூந்தலினு நாலுமருவியினும்
வேரிநறுஞ்சாந்தொழுகும் வேங்கடமே—பாரினுளா
ரற்புதவர்க்கத்தா ரறிவரியார்முன்மேய்த்த
[illegible]

இதன்பதப்பொருள்.

நாரியர்-பெண்கள், தம்-தங்களுடைய, கூந்தலினும் - அளகபாரத்திருந்து வாசனையையுடைய, நறுமநல்ல, சாந்து-குழம்பு, ஒழுகும்-சிந்துமெனவும், நாலும்-கீழ்நோக்கியோடும், அருவியினும்-அருவியிலும், வேரிநறும்-நல்லதேனோடுகூடின, சாந்து-சந்தனக்குழம்பு, ஒழுகும்-ஓடுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பாரினுளார்-பூமியிலுள்ளவர்கள், அற்பம்-சிறிதுகாலத்தையுடைய, சுவர்க்கத்தார்-தேவலோகத்தையுடையாரும், அறவு-அறிதற்கு, அரியார்-அரிதானவர், முன்-முற்காலத்திலே, பெய்த-பெயச்செய்த, நல்-நல்ல, பசு-ஆக்களினது, வர்க்கத்தார்-கூட்டத்தையுடையவரது, நாடு-ஊர்—எ-று. ( )

மாதரார்கண்ணும் மலைச்சாரலுங்காமர்
வேதராகந்தெரியும் வேங்கடமே—பாதமே
போதைப்படத்துவைத்தார் பொர்வளையுமாற்றரசர்
வாதைப்படத்துவைத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

மாதரா-பெண்களுடைய, ஆர்-நிறைந்த, கண்ணும்-கண்களும்,காமர்-மன்மதனுடைய, வேது-துன்பமாகிய, ஆராகம்-ஆசையை, தெறியும்-பொருந்துமெனவும், மலைச்சாரலும்-மலைப்பக்கத்திலும், வேதாகம்-வேதத்திரயமாம், செறியும்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, பாதமாம்-திருவடிகளாகிய, போதை-பூவை, படத்து-பாம்பின்படத்தில், வைத்தார்-இருத்தினவர், பொர்வளைய-யுத்தமுண்டாக, மாற்றரசர்-சத்துருவாய் இராசாக்கள், வாதைப்பட-துன்பப்பட, துவைத்தார்-மிதித்தவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. போதைப்படத் துவைத்தலாவது, காளிங்கன்பேரில் நடித்ததாம். வாதைப்படத்துவைத்தலாவது, பாரதயுத்தம். (அஉ)

எத்திக்குங்காய்ப்பு மெயினரும்பாத்திணையே
வித்திக்கதிர்விளக்கும் வேங்கடமே—தித்திக்கும்
காரிமாறன்பாவான் காதலித்தார் தன்பிறவி
வாரிமாறன்பாவான் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

எத்திக்கும்-எத்திசைகளிலுமுள்ள, காய்ப்பு-மூங்கிலும், எயினரும்-வேடரும். (முறையே) ஆரத்திணையே-முத்துகளையே, வித்தி-இறைத்து, கதிர்-கிரணங்களை, விளக்கும்-விரிக்கின்றதெனவும், ஆர - நிறப்பகாணும்படியான, திணையே-திணைவிதையையே, வித்தி-விதைத்து, கதிர்-கதிர்களை, விளக்கும்-உண்டாக்குவாரெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தித்திக்கும்-இனிமையான, காரிமாறன் - நம்மாழ்வாருடைய, பாவான்-பாசுரத்தையுடையவன், தம்-தம்மை, காதலித்தார்-விரும்பினவருடைய, பிறவி-பிறப்பாகிய, வாரி - சாகரத்தைக.

மாறு-நீக்கும், அன்பாவான்-அன்பினையுடையவன், வாழ்வு-வாழுமிடம்—எ-று. (௮௩)

பாரோடுகான்யாறும் பல்களிறுநந்தவனம்
வேரோடலைத்தீர்க்கும் வேங்கடமே—காரோதஞ்
சுட்டகருவிற்படையார் தொண்டனைமீண்டேழுவகைப்
பட்டகருவிற்படையார் பற்று.

இதன்பதப்பொருள்.

பார்-பூமியில், ஓடு-ஓடாநின்ற, கான்யாறும்-காட்டாறும், வேரோடலை-வேர்வையோடுதலை, தீர்க்கும்-நீக்குமெனவும், பல்களிறும்-பலயானைகளும், நந்தவனம்-நந்தவனத்தை, வேரோடு-வேரோடு-கூட, அலைத்து-அலையச்செய்து, ஈர்க்கும்-இழுக்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கார்-கரியநிறத்தையும்-ஓதம்-திரையையுமுடையகடலை, கட்ட-சுடச்செய்த, கரும்-பெருமைபொருந்திய, வில-வில்லாகிய, படையார்-ஆயுதத்தையுடையவர், தொண்டனை-தாசனை, மீண்டு-திரும்பி, ஏழுவகைப்பட்ட-எழுவகைப்பட்ட, கருவில் - பிறப்பிலே, படையார்-படையாதவர், பற்று-பற்றுமிடம்—எ-று. கடலைச்சுட்டதாவது, இராமாவதாரத்தில் திருவணைகட்டுமுன் வருணனைச்சீறினது, எழுவகைப்பிறப்பாவது, தேவர்-மனிதர்-பேய்-மிருகம்-பறவை-புழுக்கள்-நரகத்தாருமெனக்கொள்க. (௮௪)

நன்காமர்வண்டினமு நால்வாய்மதகரியு
மென்காமரமுழக்கும் வேங்கடமே—புன்காம
மேவார்கழலா ரெனதுளத்திலென்றலையிற்
பூவார்கழலார் பொருப்பு.

இதன்பதப்பொருள்.

நன்காமர்-நல்லவழகினையுடைய, வண்டினமும்- வண்டுக்கூட்டங்களும், மென்காமரம்-மெல்லெனும்பண்ணை, முழக்கும்- ஒலிக்குமெனவும், நால்வாய்-நான்றவாயினையும், மதம்-மதத்தினையுமுடைய, கரியும்-இயானையும், மென்கா-மெல்லியசோலையில், மரம்-மரங்களை, உழக்கும்-தன்னிமிதிக்குமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, புன்காமம்-அற்பமானகாமவிகாரத்திலே, மேவார்-பொருந்தாதவர்களினின்றும், கழலார்-நீங்கார், எனதுளத்தில்-எனதிருதயத்திலும், என்றலையில்-என்சென்னியிலும்வைத்த, பூவார்-பொற்றாமரைக்கொப்பான, கழலார்-திருவடிகளையுடையவரது, பொருப்பு-மலை—எ-று. (௮௫)

பாம்புங்குளிர்சந்தின் பக்கத்தினிற்கின்ற
வேம்புமருத்துவர்க்கும் வேங்கடமே—காம்புகர
மானவனைநன்குடையா ராளாய்த்தொழுதேத்து
மானவனைநன்குமையார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

பாம்பு-அரவும், மருத்து-காற்றை, உவர்க்கும்-வெறுக்குமெனவும், குளிர்-குளிர்ந்த, சந்தின்-சந்தனமரத்தின், பக்கத்தில்-அருகினில், நிற்கின்ற-இருக்கின்ற, வேம்பு-வேப்பமரம், மரு-வாசனையை, துவர்க்கும்-துவர்க்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, காம்பு-காம்பை, காமான-கையாகக்கொண்ட, வரை-மலையை, நன்குடையார்-நல்லகுடையாகவுடையவர்க்கு, ஆளாய் - தொண்டராய், தொழுது-வணங்கி, ஏத்துமானவரை-தோத்திரஞ்செய்கின்ற தாசர்களை, நன்கு-நன்றாக, உடையார்-உடையவரது, வாழ்வு-வாழுமிடம்—எ-று. பாம்பு காற்றைவெறுத்தலாவது, சந்தனமரத்தை புசித்தலாம். வெப்பமரந்துவர்த்தலாவது, கசவாதென்பதாம். (அசு)

சாருமருவிதவழ சாரலுஞ்செஞ்சந்தனத்தின்
வேருமரவமறு வேங்கடமே—நேரு
மதுகையிடவர்க்கறுத்தார் மாமலரோன்சாப
மதுகையிடவர்க்கறுத்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

சாரும்-சார்ந்த, அருவி-அருவிகளானவை, தவழ்-ஊருகின்ற, சாரலும்-மலைப்பக்கத்திலும், அரவம்-ஆரவாரம், அறு - ஒழியாதெனவும், செம்-செவ்விய, சந்தனத்தின்-சந்தனமரத்தினது, வேரும்-வேரினிடத்தும், அரவம்-பாம்பு, அறு-நீங்காதெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நேரும்-கிட்டின, மது-மதுவென்றும், கையிடவர்-கையிடவனென்றுஞ், சொல்லிய-இருவரை, கறுத்தார்-கோபித்தவர், மா-பெருமைபொருந்திய, மலரோன்-பிரமதேவனுடைய, சாபம்-சாபத்தை, மதுகை-பலத்தையுற்ற, இடவர்க்கு-காளையையுடையசிவனுக்கு, அறுத்தார்-நீக்கினவர், வாழ்வு-வாழுமிடம்—எ-று. மதுகையிடவராவார் மச்சாவதாரத்திற் கொல்லப்பட்டவர் பிரமனிட்டசாபந்தீர்த்தலாவதுகபாலமோக்ஷம். (அஎ)

மண்மட்டுந்தாழ்சுனையும் வட்டச்சிலாதலமும்
விண்மட்டுந்தாமரைசேர்வேங்கடமே—எண்பட்டும்
பாதமுன்னினைந்தார் பரமபதஞ்சேர்கவென்று
போதமுன்னினைந்தார் பொருப்பு.

இதன்பதப்பொருள்.

மண் - பூமி, மட்டும் - பரியந்தம், தாழ் - தாழாநின்ற, சுனையும்-சுனையும், விள்-மலராநின்ற, மட்டு-தேனையுடைய, தாமரை - பங்கசத்தை, சேர்-பொருந்துமெனவும், வட்டம்-விருத்தமான, சிலாதலமும்-கல்லுத்தலமும், விண்மட்டும்-ஆகாயபரியந்தம், தா-தாவுகின்ற, மரை-மரையென்னுமிருகத்தை, சேர்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, எண்பட்டும்-நினைக்குமளவில், பாதம்-இருபாத

ளை, முன்னி-நினைந்து, நைந்தார்-உருகுகின்றவர்கள், பரம்பரம்-பரம்பதத்திலே, சொகவென்று சேர்ந்தக்கதென்று, போதம்-அறிவு, முன்-முற்காலத்தில, நினைந்தார் நினைந்தவருடைய, பொருப்பு-மலை—எ-று.

போதாவிருசுடரும் போதுதற்கு மோதுதற்கும
வேதாவினுமுடியா வேங்கடமே—மாதாவின்
விந்தனைத்துக்கி யீபான விம்மியழாதாட்கொண்டான்
தாய்க்குத்தனைத்துக்கினியான் சார்பு.

இதன்பதப்பொருள்.

போதா-போகமாட்டாத, இருசுடரும் சூரியசந்திரரென்ற விரண்டுபேரும், போதற்கும்-போகிறதற்கு, மேல்-ஆங்கில, தாவினல-தாவுதலி லே, முடியா-நிறைவேறாதனவும, ஓதுதற் கு-அவர்களதுமகிமையை ச்சொல்லுவதற்கும், வேதாவினு-பிரமதேவனாலு,முடியா-கூடாதே னவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, மாதாவின-தாயினுடை ய, விந்து-பந்தம், தனைத்துக்கி-கொடியமையைவிட்டது,இனி-இனிமே ல, யான-நான,விம்மி யழாது-ஏங்கியழாமல், ஆட்கொண்டான-அடிமை கொண்டவன, தாய் த-தாயைப்போல், தனைத்து-தனதுசத்து-ச ங்கத்துக்கு, இனியான-இனிமையானவனுடைய, சார்பு - சாருமிடம் —எ-று (௮௯)

பெய்கதமோதப்பெபான்றுபிரசாபதி வொரிதுய
வெப்பகுமணிமுரசதிவரும வேங்கடமே—வாய்பக முதுர
வண்ணைப்போரிட, ரான பண்ணிறுணமாவல்போல
தண்ணைப்போரியிராரா சார்பு

இதன்பதப்பொருள்

பெய்க்கும-பசாசுக்கு, ஒப்பப்பொனறு- ஒருபசாசுபோல பிர தாப மபககமாகி, திரிவாரக்கும்-சஞ்சரிக்கிற சீபுபக்களுக்கும், முத் தி-மோட்சம, வருப-கிடைக்கப்பெறவும், வெப்ப ஞ்சு மூங்கிலினின்று ம், மணி-அழகிய, முத்து-முத்துக்கள், இவரும் பிரகாசிக்கப்பெறவு மான, வேங்கடமே-திருவேங்கடமலையே, வாயக து-வாயிலே, அமுது-அமிர்தத்தைப்போல, ஊர-ஊறுகின்ற, வண்ணைப்போர-வளமையுடையபொ ருந்திபதிருவாயும், ஆயிரத்தான-ஆயிரமெனனுங்கொக்கையுமுடையவ ன், மண்ணிறுல-பூமியைபறறி, பாவலிபோல-மாவலியாகிய அசுரனி டத்து, தண்மைபபெறாம-தானூர்தபெயராகூறி, இரந்தான-இரசித்தவ னுடைய, சார்பு-சாருமிடம—எ-று. (௯௰)

வாழ்க்கைமனைக்குதவரும வாளரியுமாதங்க
வேழ்க்கைமறந்திகழும வேங்கடமே—தொட்கைவிபூ
ம[illegible]வந்தனைக்கழித்தார வழிலங்கைப்பாரகளை
ளோசவத்தனைக்கழித்தா ருர.

இதன்பதப்பொருள்.

வாழ்க்கை-இன்பம்பொருந்தின, மனை-இல்வாழ்க்கையை, நீத்தவரும்-துறந்தவரும், மாது-பெண்களது, அங்கம்-சரீரத்தினுடைய, வேழ்கை-ஆசையை, மறந்து-நினையாமல், இகழும்-இகழ்ச்சிசெய்வனவும், வாள்-விளக்கமாகிய, அரியும்-சிங்கமும், மாதங்கம்-யானையினிடத்துண்டாகிய, வேழ்கை-ஆசையால், மறம்-வீரம், திகழும்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தோள்-புயத்தோடு கூடின, கை-கைகளை, விழ-விழும்படி, மா-பெருமைபொருந்திய, கவந்தனை-கவந்தனென்பவனை, கழித்தார்-கொன்றவர், வாழ்-வாழாநின்ற, இலங்கை- இலங்கையிலிராநின்ற, பாதகரை - இராவணாதிகளை, லோகவந்தனைக்கு-உலகத்தார், தண்டம்-சமர்ப்பிக்க, அழித்தார்-கெடுத்தவருடைய, ஊர்-பதி—எ-று. (கக)

கூட்டுத்தவத்தவருங் கோளரிகளின்றிரளையும்
வேட்டுவரம்பொழியும் வேங்கடமே—மோட்டுமதத்
தந்திக்கமலத்தார் தாம்பெறுவீடளித்தா
ருந்திக்கமலத்தா ரூர்.

இதன்பதப்பொருள்.

கூட்டு-கூட்டப்பட்ட, தவத்தவரும் - தவத்தினையுடையவர்களும், வேட்டு-வேண்டுகின்ற, வரம்-வரங்களை, பொழியும் - சொரிவார்களெனவும், கோள்-கோட்பாட்டையுடைய, அரிகளின்றிரளையும்-சிங்கக்கூட்டங்களும், வெட்டுவர்-வேடருடைய, அம்பு-பாணம், ஒழியும்-நீங்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, மோட்டு - பெருமையும், மதம்-மதத்தையுமுடைய, தந்திக்கு-கஜேந்திரனென்றயானைக்கு, அமலத்தார்-நிர்மலமானவர்கள், தாம்-தாங்கள், பெறு-அடையாத, வீடு-பரமபதத்தை, அளித்தார்-கொடுத்த, உந்திக்கமலத்தார்-உந்தியேகமலமாகவுடையவரது, ஊர்-பதி—எ-று. (கஉ)

வஞ்சமடித்திருப்பார் வாக்குங்கலைக்கோடும்
விஞ்சமடித்திருக்கார் வேங்கடமே—கஞ்சப்
பிரமாநந்தத்தான் பிரபஞ்சமாய்த்த
பரமாநந்தத்தான் பதி.

இதன்பதப்பொருள்.

வஞ்சம்-கபடத்தை, அடித்து-நீக்கி, இருப்பார்-இருக்கின்ற பெரியோர்களுடைய, வாக்கும்-வார்த்தையும், விஞ்சம்-மிகுதியும், மடித்து-ஆராய்ந்து, இருக்கு-இருக்குவேதத்தை, ஆர்-பொருந்துமெனவும், கலைமானினுடைய, கோடும்-கொம்பும், விஞ்சம்-மிகுதியும், மடித்திருக்கார்-முந்தத்திருகுதலைப் பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கஞ்சம்-தாமரைப்பூவிலிருக்கும், பிரமா-பிரமதேவனை, நந்த-இறப்பதான, தான்-தான், பிரபஞ்சம் - பிரகிருதியை, மாய்த்த-மறைத்த, பரமாநந்தத்தான் - பரமபதத்தினையுடையவனது. பதி - ஊர

—எ-று. மிருந்தசுகத்தையுடையதை மிருந்தசுகமென்று ஆகுபெயராய் பரமபதத்தின்மேலேற்றப்பட்டது. (௩௩)

சேலஞ்சுங்கண்மடவார் தேங்குழலுங்கோங்கினமு
மேலஞ்சுவர்க்கமார் வேங்கடமே—கோலஞ்சேர்
மாரிலலங்காரத்தார் மற்றும்பல்பூணணிந்த
காரிலலங்காரத்தார் காப்பு.

இதன்பதப்பொருள்.

சேல்-சேற்கெண்டைகள், அஞ்சும்-பயப்படத்தக்க, கண்-கண்களையுற்ற, மடவார்-அறியாமையுடைய பெண்களினது, தேங்குழலும்-மணமுறுவளகமும், மேல்-மேலான, அஞ்சுவர்க்கம்-ஐந்துவகையை,ஆர்-பொருந்தியிருக்குமெனவும், கோங்கினமும்- கோங்குமரக்கூட்டமும், மேல்-மேலாகவிருக்கிற,அம்-அழகிய,சுவர்க்கம்-தேவலோகத்தை, ஆர்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கோலஞ்சேர்-அழகுபொருந்திய, மாரில்-மார்பில், அலங்கு-அசையாநின்ற, ஆரத்தார்-கவுஸ்துவமென்ற பதக்கத்தையுடையவர், மற்றும்-அதுவல்லாமல், பல்-பலவாகிய, பூண்-ஆபரணங்களை, அணிந்த-தரித்த, காரில்-மேகத்தைப்போல, அலங்காரத்தார்-அழகையுடையவர், காப்பு-காக்குமிடம்—எ-று. ஐங்குழலாவது, முடி-கொண்டை-குழல்-பணிக்கை-சுருள்-எனக்காண்க. (௩௪)

கொய்யுமலர்ச்சோலைக் கொக்கும்பிணியாளர்
மெய்யும்வடுத்தவிரும் வேங்கடமே—நையுஞ்
சனனந்தகனார் தலையிலிதோள்சாய்த்த
சினனந்தகனார் சிலம்பு.

இதன்பதப்பொருள்.

கொய்யும்-பறிக்கப்பட்ட, மலர்-பூவையுடைய, சோலை - சோலையினிடத்திராநின்ற, கொக்கும்-மாமரமும், வடுத்து-வடுவாகிய பிஞ்சுபருத்து, அவிரும்-பிரகாசிக்குமெனவும், பிணியாளர்-நோயாளருடைய, மெய்யும்-சரீரமும், வடு-தழும்பு, தவிரும்-நீங்குமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நையும்-வருந்தாநின்ற, சனனம்-பிறப்புக்கு, அந்தகனார்-கொல்லப்பட்டயமனாவார், தலையிலி - கவந்தனுடைய, தோள்-தோளை, சாய்த்த-விழப்பண்ணின, சினம்-கோபத்தையும், நாந்தகம்-வாளையுமுடையவரது, சிலம்பு-மலை—எ-று. (௩௫)

நோக்கவலைநோயினரு நீடுசிலைவேடுவரும்
வேர்க்கவலைமூலங்கல் வேங்கடமே-கார்க்கடன்மேல்
தா[illegible]ங்காலத்திறப்பார் தம்மைவிழுங்கிக்கனிவாய்
[illegible]காலத்திறப்பார் வெற்பு.

இதன்பதப்பொருள்.

நேர்-மிகுந்த, கவலை-வருத்தத்தையுடைய, நோயினரும்-பிணியாளரும், வோக்க-வோவைசிந்த, அலை-அலைபிணையுடைய திருப்பாற்கடலிற்பள்ளிகொண்டிராநின்ற, மூலம்-உலகத்திற்குக்காரணபூதராகிய ஆதிமூலக்கடவுளை, கல-கற்றுச்சொன்னதிரோதமெனவும், நீடு-நீண்ட, சிலை-விலவிணையுடைய, வேடுவரும்-வேடர்களும், வோக்க-வோவைபிறக்க, கவலை-கவலைக்கிழங்கை, கல-கெல்லுவாரெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, கார-கரிய, கடல்-சமுத்திரமானது, மேலதாண்டும்-மேலேயெழும்பாநின்ற, சாலத்து-வேளையில், இறப்பார்-தமமைஇறப்பவர்களை, விழுங்கி-உட்கொண்டு, கனிவாய்-கோவைப்பழம்போன்றவாயை, மீண்டும்-திரும்பியும் வெளிக்குக்கொண்டுவருங்காலத்தில், திறப்பார்-திறக்கின்றவருடைய, வெற்பு-மலை—எ-று.

தண்டாமரைச்சுனையிற் சாதகமும்வேடுவரும்
விண்டாரைநாடுகின்ற வேங்கடமே—தொண்டாக்கி
ஏவத்தனக்குரியா ரென்னைமுன்னாளெடுத்த
கோவர்த்தனக்குடையார் குன்று.

இதன்பதப்பொருள்

தண்-குளிர்ந்த, தாமரைச்சுனையில்-கமலப்பொய்கையிலிராநின்ற, சாதகமும்-சாதகப்புள்ளும், விண்-மேகத்தை, நாடுகின்ற-விரும்புகின்றதெனவும், வேடுவரும்-வேடர்களும், விண்டாரை-நீங்கினவர்களை, நாடுகின்ற-தேடுகின்றனரெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, என்னை-என்றனை, தொண்டாக்கி-அடிமையாக்கி, ஏவ-பணிவிடைசெய்ய, தனக்குரியார்-தனக்குரியவர், முன்னாள்-முற்காலத்தில், எடுத்த-எடுக்கச்செய்த, கோவர்த்தனக்குடையார்-கோவர்த்தனகிரியைக் குடையாகவுடையவர், குன்று-மலை—எ-று இந்திரன் கன்மாரிபெய்தநாளில் குடைபோலெடுத்ததால், கோவர்த்தனக்குடையென்றதுருவகமாம். (௬௭)

வாழரியுஞ்சந்தனந்தோய் மாருதமுந்தாக்குதலால்
வேழமருப்புகுதும் வேங்கடமே—நீழலமர்
பஞ்சவடிகாட்டினன் பாரளப்பான்போலெவர்க்குங்
கஞ்சவடிகாட்டினன் காப்பு.

இதன்பதப்பொருள்.

வாழரியும்-சுகமானசிங்கமும், தாக்குதலால்-பாய்ச்சலால், வேழம்-யானையினுடைய, மருப்பு-கொம்பு, உகுதும்-சிந்துமெனவும், சந்தன மரத்தில், தோய்-படியாநின்ற, மாருதமும்-காற்றும், தாக்குதலால்-படுதலால், வேழம்-மூங்கில்-மரு-மணம், புகுதும்-பொருந்துமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, நீழல்-நிழல், அமர்-பொருந்திய, பஞ்சவடிகாட்டினன்-பஞ்சவடியாகிய காட்டையுடையவன், பாரளப்பான்போல-பூமியளக்கிறவனைப்போல, எவர்க்கும்-எவர்க்கும்,

சஞ்சம்-தாமரைப்பூப்போலும், அடி-திருப்பாதங்களை, காட்டினன்-காண்பித்தவன், காப்பு-காக்குமிடம்—எ-று. (கூஅ)

எவ்விடமுமாறுதோய்ந் தெல்லோரும்பல்பாம்பும்
வெவ்விடரினீங்கியெழும் வேங்கடமே—தெவ்விடையேழ்
அட்டவனகத்தணையா னாதிமறைநூன்மார்க்கம்
விட்டவனகத்தணையான் வெற்பு.

இதன்பதப்பொருள்.

எவ்விடமும்-எவ்விடத்திலும், ஆறுதோய்ந்து - நதிபடிந்தோடுதலால், எல்லோரும்-சகலருக்கும, வெவ்விடரில்-வெவ்விய துன்பத்தில், நீங்கி-விட்டு, எழும்-நீங்குவதெனவும், பலபாம்பும்-பலபாம்புகளும, வெவ்விடரில்-வெய்யவெடிப்புகளினின்றும், நீங்கி-விட்டு, எழும்-புறப்படுமெனவுமான, வேங்கடமே-திருவேங்கடமலையே, தெவ்விடையேழ்-பகைத்தகாளையேழையும், அட்டவன்-வென்றவன், அகத்தணையான்-பாம்பையொத்தையாகவுடையவன், ஆதி-முதன்மையாகிய, மறைநூன்மார்க்கம்-வேதநூன்மார்க்கப, விட்டவன் - நீங்கினவனுடைய, அகத்து-சரீரத்தினிடத்து, அணையான்-சேராதவனுடைய, வெற்பு - மலை—எ-று. எழுகாளைகளை வென்றதாவது, பின்னைப்பிராட்டியார் திருக்கலியாணத்தில் நடந்ததை. (கூகூ)

பாடுமதுகரமும் பச்சைத்தழைக்குடிலில்
வேடுமணமருவும் வேங்கடமே—நீடு
மகராலயங்கடந்தார் வாழ்வசுதேவர்க்கு
மகராலயங்கடந்தார் வாழ்வு.

இதன்பதப்பொருள்.

பாடு-கீதமவாசிப்பதுபோலக் கூப்பிடுபடியான, மதுகரமும-வண்டும, மணமருவும-பரிமளத்தைப்பொருந்துமெனவும, பச்சை-பச்சைநிறத்தையுடைய, தழை-இலைபாலமைப்பித்த, குடிலில-சிறுவீட்டில், வேடு-வேடருடைய, மணமருவும-கலியாணத்தைப பொருந்துமெனவுமான, வேங்கடமே - திருவேங்கடமலையே, நீடு-நெடிய, மகராலயங்கடந்தார-சமுத்திரங்களைக்கடந்தவர. வாழ்-வாழ்வையுடைய, வசுதேவர்க்கு-வாசுதேவர்க்கு, மகரால-பிள்ளைகளால, ஐயங்கள்-சந்தேகங்கள். தந்தார்-கொடுத்தவருடைய. வாழ்வு-வாழுமிடம—எ-று. (ர)

ஆதிதிருவேங்கடமென் றுயிரபேராணிடமென்
றோதியவெண்பா வொருநூறும்—கோதில
[illegible]வாளபட்டரு கோகனகத்தாள்சே
[illegible]வாளதாசன்றன் வாக்கு,

திருவேங்கடமாலை-முற்றிற்று.